திராவிடநாடு

2—10—60 | வார வெளியீடு | விலை 16 காசு

# சிந்தை நோகும்!

"முத்து"

அங்கே,

ஆறுள்ள இடமெல்லாம் அணைகள்! தேக்கம்!
அணுவுக்கு உலையதுவும் வடக்கே உண்டு!
நீருள்ள இடமெல்லாம் மின்சக்தி நிலையம்!
நிலையான பெருந்தொழில்கள்! உரத்துக்கு ஆலை!

பாருக்குக் காட்டுதற்குப் பக்ரா ஒருநங்கல்!
பண்பட்ட வயற்புனங்கள்! பாங்கான பாதை!
நேருவுள்ள மாநிலத்தில் நின்றவிடம் பசுமை!
நல்லகனிச் சுரங்கங்கள் அகழ்கின்ற காட்சி!

விண்முட்டும் புகைபோக்கி வியப்பூட்டும் வகையில்!
விதவிதமாய்ச் சிறுதொழில்கள்! விரிவான திட்டம்!
கண்கட்டு வித்தையென பாலையெலாம் பச்சைமயம்!
கண்டுவந்தோர் ஏத்துகிறார் ஐந்தாண்டுத் திட்டம்!

இங்கோ ?!

கந்தைக்கும் வழியில்லை! கழனிக்கும் நீரில்லை!
குந்துதற்கும் 'கூடி'ல்லை! நடைபாதைத் திருவாசம்!
முந்திமுந்தி உலகுக்கு மொழிவகுத்த திருக்கூட்டம்!
முறையிடவும் வக்கின்றி முடங்குகின்ற கோலம்!

சிங்களத்தின் கரையோரம் செந்தமிழர் கூட்டம்!
திருநாட்டின் புகழ்பாடப் படைகொண்டு அல்ல!
தங்களின மரபெல்லாம் பின்னடைந்து போக
பொங்குரிமைக் கொடுமையினால் உயிரிழந்த கூட்டம்!

# எதிர்பார்க்கலாமா?

மலர் 19 | ஆண்டுச்சந்தா ரூ. 8. (9—10—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 13

இங்கிருந்து சென்று இலங்கையில் வாழும் இல்லை, வதியும், இல்லை, இல்லை—வதைபடும் தமிழ் மக்களின் நிலை வர வர மிகவும் மோசமாகிக்கொண்டு வருகிறது. அவர்களை மக்களென்றே கருத இலங்கை அரசு மறுக்கிறது என்ற சொல்லக்கூடிய அளவுக்கு அவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள்.

தகநாயக்கா, பண்டார நாயக்கா, சேனா நாயக்கா என்ற இவர்கள் இலங்கை முதல்வர்களாய் இருந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு நேர்ந்த இன்னல்களும் இடையூறுகளும் இனி இராது. காரணம், காலஞ்சென்ற (செம்மைப்பட்ட) பண்டார நாயக்காவின் துணைவியார் இலங்கையின் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எனவே, இவர் காலத்தில் தமிழ் மக்களின் குறைகள் களையப்பட்டு அவர்களுக்கெல்லாம் நல் வாழ்வு மலர வழிகோலப்படும் என்று பெரிதும் நம்பிக்கையோடு பேசப்பட்டது.

விரைவில் இரு நாட்டு முதல்வர்களும் ஒன்று கூடிப் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரக்கூடும் என்பது உறுதி என்ற முறையிலும் பேசப்பட்டது.

ஆனால், இப்போது நடப்பது என்ன? நீதி கிடைக்கும் என்று எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக அநீதிதான் கிடைக்கிறது. அதிலும், அநீதிக்கு மேல் அநீதி என்று சொல்லக்கூடிய அளவுக்கு நாள்தோறும் ஏதாவதொரு தொல்லையும், அதனால் துன்பமும், அதனால் தாங்கமுடியாத சுமையும் தமிழ் மக்கள்பால் ஏற்றப்படுகிறது.

24—9—60-ல் "சுதேசமித்திரன்" ஏடு, அநீதிக்கு மேல் அநீதி என்று தலைப்பிட்டு, இலங்கைவாழ் தமிழ் மக்கள் படும் அவதியையும் அழுகுரலையும் எடுத்துக் காட்டும் வகையில் ஒரு தலையங்கம் தீட்டியுள்ளது. அந்தத் தலையங்கத்தின் ஒரு பகுதியை இங்கு தந்துள்ளோம்.

"இலங்கையில் வாழும் இந்தியருக்கும் இப்போது புதிதாக இரு வில்லங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவது, அங்கு தொழில் அல்லது வர்த்தகம் நடத்தும் அந்நியர் ஒவ்வொருவரும் வருஷத்திற்கு ரூ. 1000 கட்டணம் செலுத்தவேண்டுமென்ற உததரவு. அந்நியர் இலங்கைப் பிரஜைகளுடன் கூட்டாக நடத்தும் வர்த்தக ஸ்தாபனங்களும் இத்தகைய ஒரு கட்டணத்தைக் கொடுக்கவேண்டும். எல்லா அந்நியருக்கும் இந்த வரி உண்டாயினும், இதனால் விசேஷமாகப் பாதிக்கப்படுவோர் இந்தியரே. அவர்களில் பலர் சிறிய கடைகள் வைத்து ஜீவனம் நடத்துவோர். அவர்கள் வருஷத்திற்கு ரூ. 1000 கட்டணம் எவ்வாறு செலுத்த முடியும்? இதே சமயத்தில் மூன்று மாத காலத்திற்கு மேல் அத்தீவில் தங்க அனுமதிச் சீட்டுப் பெறுவோர் வருஷத்திற்கு ரூ. 400 வீதம் ஒரு புதிய கட்டணம் செலுத்தவேண்டுமென்றும் ஒரு அறிக்கை வெளியாகியிருக்கிறது. இதுவும் முக்கியமாக அங்கு தற்கால அனுமதிச் சீட்டுடன் தங்கியுள்ள பல்லாயிரக் கணக்கான இந்தியரையே பாதிக்கக்கூடியது. ஏற்கெனவே அனுமதிச் சீட்டுகள் பெற்றுள்ளவர்களும் இக்கட்டணத்தைச் செலுத்தவேண்டுமென்பது விதிமுறைக்கு மாறானது. அத்தகைய இந்தியர்கள் தங்களுக்காக மட்டும் இக்கட்டணத்தைச் செலுத்த வேண்டுமா அல்லது தங்கள் மனைவிகள் அல்லது குழந்தைகளுக்காகவும் தனித் தனியாகக் கட்டணம் கொடுக்க வேண்டுமா என்பது தெரியவில்லை. அவ்வாறு அவர்களுடைய குடும்பத்திலுள்ள ஒவ்வொருவர் மீதும் இச்சுமை ஏற்றப்படுமாயின், அது எவ்வளவு கொடிய அநீதியாயிருக்கும் என்பதை விவரிக்கத் தேவையில்லை. எப்படியாவது அங்குள்ள இந்தியர்களை வெளியேற்றுவதே அதன் நோக்கமாக இருக்க முடியும். பொதுவாக அங்கு பிரஜா உரிமை மறுக்கப்பட்ட இந்திய வம்சா வழியினரைப்பற்றிய பிரச்சினையையும், இந்தியா—இலங்கை நல்லுறவு வளர்ச்சியையும் பற்றிக் கலந்து பேச விரைவில் இரு தேசப் பிரதமர்களும் கலந்து பேசலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இச்சமயத்தில் தாங்கள் மேற்குறித்த நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருப்பது அப்பேச்சுக்கேற்ற சூழ்நிலையை விளைவிக்கத் தக்கதுதானா என்று இலங்கை அதிகாரிகள் யோசிக்க வேண்டும்."

இதைப் படிக்கும் எந்தத் தமிழனுடைய குருதியும் கொதிக்காம்ல் இருக்க முடியாது. ஆனால், இங்கு நடைபெறும் பச்சைத் தமிழராட்சி என்று சில பெரியவர்களால் போற்றிப் பாதுகாப்பளிக்கப்படும் சென்னை அரசோ, இது குறித்துச் சிறிதும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

'சுதேச மித்திரன்' போன்ற தேசியப் பாதுகாப்பேடுகள் இடித்துக்கூறிய பின்னராவது சென்னை அரசு இலங்கைவாழ் தமிழ் மக்களின இன்னல் துடைத்து இன்ப வாழ்வு மலரச்செய்யாவிட்டாலும், ஓரளவு அவர்கள் படும் துன்பங்களையாவது நீக்க முழலுமா? முடியுமா? என்று எதிர்பார்க்கலாமா? ○

# திட்டத்தால்

# பலனும் - தரமும்

# உயரவேண்டும்

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவாதத்தின்போது சென்னை சட்ட மன்றத்தில் சி. என். ஏ. ஆற்றிய உரை.**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி இந்த மன்றத்தில் பலருடைய கருத்துக்களைக் கேட்பதற்கு வாய்ப்புக் கிடைத்த பிறகு, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் என்னுடைய கருத்தைத் தெரிவிக்க வாய்ப்புக் கிடைத்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிய கருத்தைத் தெரிவிக்கிற நேரத்தில், கடல் நீர் கரிக்கிறது என்று சொன்னவுடன் உங்களுக்கு கடல் என்றால் பயமா? கடல் பிரயாணம் என்றாலே பயமா? கடற்கரையில் நின்றுகொண்டு பேசுகிறாயே, உனக்குக் கப்பல் என்றாலே பயமா? கப்பல் கடலில் நிற்கக் கூடாதா? உப்பு இல்லாமல் மனிதன் வாழ முடியுமா? கடல் நீர் கரிக்கிறது என்கிறாயே, உப்பு பிடிக்கவில்லையா? கடலும் பிடிக்கவில்லையா என்று கேட்பது போல் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் காணக்கூடிய சில குறைபாடுகளை எடுத்துச்சொல்லக் கூடிய நேரத்தில், உங்களுக்குத் திட்டம் என்றாலே பிடிக்கவில்லையா, திட்டங்களை நிறைவேற்றுவதில் உங்களுக்கு திருப்தி இல்லையா? திட்டம் வெற்றிபெறுவது பிடிக்கவில்லையா என்ற வகையில் ஆளும் கட்சியில் உள்ளவர்கள்—அமைச்சர்கள் உட்பட எண்ணிக் கொள்வது அவ்வளவு பொருத்தமானது அல்ல என்று நான் கருதுகிறேன். ஐந்தாண்டுத் திட்டங்கள் உண்மையிலேயே அலட்சியப்படுத்தத்தக்கவை என்று நாங்கள் கருதியிருப்போமானால், இந்த ஐந்தாண்டுத் திட்டங்கள் எந்த முறையில் வகுக்கப்பட்டிருக்கின்றது என்பதைப்பற்றி அக்கறை செலுத்தி இருக்கமாட்டோம். திட்டமிட்டபடி வாழ்க்கை நடத்தப்படவேண்டும் என்பது 19-ஆவது நூற்றாண்டு முடிந்து இருபதாவது நூற்றாண்டு ஆரம்பமானவுடன் நாகரிக அரசுகள் ஒவ்வொன்றும் மேற்கொண்டிருக்கும் கொள்கையாகும், நடைமுறையாகும். எந்தவிதத்திலும் எந்த நாட்டிலும் அவர்கள் திட்டமிட்டபடி காரியத்தைச் செய்வதில் வரவேற்கத்தக்க வகையில் கொள்கை வெற்றிபெற்று வந்திருக்கிறதே தவிர, திட்டமிடாமல் வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று எடுத்துச்சொல்லுகிற கொள்கை பதினெட்டாவது நூற்றாண்டில் மறுக்கப்பட்டு, பத்தொன்பதாவது நூற்றாண்டில் அது குத்துயிராக இருந்து, இருபதாவது நூற்றாண்டில் அது அறவே மடிந்துவிட்டது. ஆகவே, திட்டம் அல்லது கொள்கையைப்பற்றியோ; திட்டமிட்டபடி வாழ்க்கை நடத்தப்படவேண்டும், அது தனிப்பட்டவர்களுடைய வாழ்க்கையானாலும் சரி, சமுதாய வாழ்க்கையானாலும் சரி, அல்லது அரசியல் வாழ்க்கையானாலும் சரி, அது திட்டமிட்டபடி நடத்தப்படவேண்டும், என்பதில் எங்களில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை. ஆனால், இப்பொழுது போடப்படும் திட்டம் யார் சார்பில் போடப்படுகிறது என்பதும், :யாரால் நடத்தப்பட்டு வருகிறது என்பதும், அதில் என்ன பலன்களை எதிர்பார்த்தார்கள் என்பதும், எதிர்பார்த்த பலன்களில் ஏதாவது குறைவு இருக்கிறதா, குறைவானால், அதற்கு யார் பொறுப்பு என்பதும், அந்தக் குறையைப் பூர்த்தி செய்வது மறுபடியும் அவசியமா என்பதும்தான் இதில் எண்ணிப் பார்க்கவேண்டிய விஷயமாகும். நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தைப்பற்றி விளக்கும் நேரத்தில், இதை ஒரு தனித் திட்டமாகப்பார்ப்பதற்கு இல்லை, பலஐந்தாண்டுத் திட்டங்களில் இது இடையிலேயுள்ள திட்டம் என்பது மட்டும் அல்ல, இனி வர இருக்கும் திட்டங்கள் அல்லது இதற்கு முன்னால் போடப்பட்ட திட்டங்கள் அவைகளுக்கு இடையில் இருக்கும் ஒரு வளையம் என்றும் குறிப்பிட்டார். அந்தச் சங்கிலித் தொடர் முதல் ஐந்தாண்டு திட்டத்திலிருந்து தொடங்கி ஆளும் கட்சியிலுள்ள பல தலைவர்களுடைய கருத்தின்படி, ஏறத்தாழ இன்னும் ஐந்து அல்லது ஆறு ஐந்தாண்டுத் திட்டங்கள் வரையில் 25 அல்லது 30 ஆண்டுக்காலத்திற்குத்தொடர்ந்து செல்லும் என்று தெரிகிறது. அவ்விதம்தான் இந்நாட்டினுடைய பொருளாதார நிலையைச் செம்மைபடுத்த முடியும் என்று அவர் கூறுகிறார். அந்தக் கருத்திலும் அதற்காக அவர்கள் முயற்சி செய்வதிலும், அவர்கள் ஆர்வம் காட்டுவதிலும் யாரும் குறைபடுவதும் இல்லை, அது தவறு என்று யாரும் வாதாடவும் மாட்டார்கள். ஆனால், பொருளாதாரத் துறையில், அரசியல் துறையில் இந்தத் திட்டத்தைத்

# கிடைக்கும் வருமானம் பரவலாகவேண்டும்

தீட்டும் நேரத்தில் முதல் இரண்டு திட்டங்கள் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு, அதில் கிடைத்த பலன்கள் என்ன என்பதைப் பார்த்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அந்த முறையில்தான் வகுத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருப்பதை நான் மறந்து விடவில்லை. ஆனால், முதல் திட்டமானாலும், அதற்குப் பிறகுள்ள திட்டமானாலும் பொருள் உற்பத்திக்காக மட்டும் அல்ல, செல்வம் சேகரிக்கப்படவேண்டும் என்பதற்காக மட்டுமல்ல, சேகரிக்கப்படும் செல்வத்தின் மூலம் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, அந்த வாழ்க்கைத் தரம் சிலருக்கு மட்டும் உயர்ந்து விடாமல் பரவலாகச் சமுதாயத்தினுடைய தரத்தையே உயர்த்த வேண்டுமென்ற பரந்த நோக்கோடுதான் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அந்தத் திட்டங்களைப்பற்றிய அறிவிப்புகளைப் படிக்கும் நேரத்தில் உண்மையிலேயே நேற்று முன் தினம் இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதம அமைச்சர் சொன்னதுபோல் கனவு உலகத்திற்கு நாம் சென்றுகொண்டிருக்கக் கூடும். அப்படிப்பட்ட நல்ல இன்பகரமான சூழ்நிலைகள் அதைப் படிக்கும் நேரத்தில் ஏற்படுகின்றன. எல்லா மக்களுக்கும் நிலம், எல்லா மக்களுக்கும் தொழில், எல்லா மக்களுக்கும் இருப்பிடம், எல்லா மக்களுக்கும் வயிறாரச் சோறு, நோய் தீர மருந்து, அறிவுவளரக் கல்வி, இப்படிப்பட்ட சிறந்த திட்டங்களை நாம் வைத்திருக்கிறோம் என்று அறிக்கையில் குறிப்பிடுவதைப் படிக்கும் நேரத்தில் உண்மையிலேயே கனவு உலகத்திற்குத் தூக்கிச் செல்லப்படுகிறோம். அப்படிப்பட்ட இன்ப நுகர்ச்சிகள் வாக்களிக்கப்படுகின்றன. அப்படி வாக்களிக்கப்பட்ட வகையில் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுப் பலன் கிடைத்ததா என்றால், கொஞ்சம் பெரிய விஷயத்தில் அதிகமான அளவில் துணிச்சலைக் காட்டுகிறவர்கள் "ஆம்" என்று கவலைப்படாமல்தான் பேசுவார்கள். ஆனால் இன்றைய தினம் கவனித்தால் ஒரு அடக்க உணர்ச்சி ஏற்பட்டிருப்பது தெரிகிறது. உண்மை தானாகவே வெளிப்பட்டுவிடும், என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. சிலபல துறைகளில் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை, கிடைத்த பலனும் சமுதாயத்துக்குப் பரவலாகச் சேராமல், எங்கோ போய்ச் சேர்ந்துவிட்டது; எது எங்கே போய் சேர்ந்தது என்பதைக் கண்டுபிடிக்கக்கூடிய வேலையில் இப்போது இருக்கிறோம். அதற்கு நிபுணர் குழுவை அமைத்திருக்கிறோம் என்று பேசப்படுகிறது, என்று அவர்கள் இன்றைய தினம் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

இதிலிருந்து முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை என்பதும், கிடைத்த பலனும் சமுதாயத்துக்குப் பரவலாகப் போய்ச் சேராமல், ஒரு சிலரிடத்தில் குவிந்துவிட்டது என்பதும் தெரிகிறது. இதை மனதில் வைத்திருப்பார்களானால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டும் நேரத்தில் பலன் குறைந்ததற்கு என்ன காரணம் என்பதைப் பார்த்து, அவைகளை நீக்கிவிட்டுக், கிடைத்தபலன் சமுதாயத்துக்குப் போய்ச் சேராமல் ஒரு சிலரிடத்தில் மட்டும் குவிந்ததற்குக் காரணம் என்ன என்பதைஆராய்ந்து பார்த்து, அந்த ஒரு சிலரிடத்தில் அந்தப் பலன் குவியாமல் இருப்பதற்கு ஏற்ப முறைகளை வகுக்கவேண்டும். அப்படி வகுத்து இருக்கிறார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. ஏன் நிச்சயமாக இல்லை என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறேன் என்றால்; அழுத்தம் திருத்தமாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார், "தொழில்கள் வளரவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, அது தனியார் துறையானாலும்சரி, பொதுத்துறையிலிருந்தாலும்சரி, எந்தத் துறையில் வளருகிறதாக இருந்தாலும் சரி, அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். எனக்குக் குறிப்பாகத் தொழில் வளரவேண்டும், உற்பத்தி பெருகவேண்டும், பொருள் கிடைக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கமே தவிர, அதை யார் நடத்துகிறார்கள், அது தனியார் துறையிலா அல்லது பொதுத் துறையிலா என்பதைப்பற்றி நான் கவனிப்பதே இல்லை" என்று அவர் மிகவும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார். அவருடைய அழுத்தம் திருத்தமான கருத்துக்குக் காரணம், அதனைச் சார்ந்திருக்கும் கட்சியினர் நடத்தும் அரசிலே இதைப்பற்றி ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருக்கும் இண்டஸ்ட்ரியல் பாலிஸி, அந்தத் தீர்மானத்தை எண்ணிக்கொண்டு, தனியார் துறை, பொதுத் துறை என்று பிரித்துப்பார்க்கப்போவதில்லை என்று அமைச்சர் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்.

நான் அதைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். தனியார் துறை, பொதுத் துறை என்பதைப்பற்றி உங்களுக்குப்பாகுபாடு இல்லாமல், எப்படி இருந்தாலும் தொழில் வளர்ந்தால் போதும் என்கிற எண்ணம் பெருந்தன்மையின்பாற்பட்டதாக இருந்தாலும்—அந்த முறையைக் கையாண்டதால்தான்—அந்த முறையைக் கையாளுவதால்தான் முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கிடைத்த பலன், கிடைத்த தேசிய வருமானம் தனிப்பட்டவர்களுடைய கையிலே போய்ச் சேர்ந்துகொண்டது. ஏழை எளியவர்கள் வாழ்கின்ற சமுதாயத்திற்குப் பரவலாகப் போய்ச் சேரவில்லை. அது தெரிந்திருந்தும், ஏன் மீண்டும் அந்தத்தவறைச் செய்யவேண்டும்? நிச்சயமாக இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துருவித் துருவிப் பார்த்தும், தனியார் துறை, பொதுத் துறை ஆகிய இரண்டையும் அலசிப் பார்த்தும் என்ன தெரிகிறது? பொதுத் துறை வளர்ச்சி அடையாது தனியார் துறை அதிகப்பட அதிகப்பட அதன்பலன் சமுதாயத்திற்குப் போய்ச்சேராது என்று பொருளாதார நிபுணர்கள் மட்டும் அல்ல—இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினால் நமக்குக் கிடைத்த அநுபவம்கூட உணர்த்துகிறது. உணர்த்தியும்கூடத் தனியார் துறைபற்றிக்காட்டப்பட்டிருக்கிற அக்கறை, பொதுத்துறைக்குச் செலுத்தப்படவில்லை என்றால், "நீங்கள் தெரிந்தும் தவறு செய்கிறீர்கள். தெரிந்தும் மக்களுக்குத் துரோகம் செய்கிறீர்கள். தெரிந்தும் சமதர்மத் திட்டத்தைத் தலைகீழாகமாற்றிச் சமதர்மத் தத்துவத்தையே தகர்த்தெறிகிறீர்கள்" என்கிற குற்றச்சாட்டில் இருந்து எப்படித் தப்பப் போகிறீர்கள்?

# உற்பத்தி பெருக வழி வகுக்கவேண்டும்

ஆகையால்தான், முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பொறுத்த வரையிலும் நீங்கள் அனுசரித்த கொள்கை திட்டங்களின் பலனைப் பரவலாகச் சமுதாயத்திற்குப் போய்ச் சேரவிடாமல் தடுத்துவிட்டது என்கிற காரணத்தினால், நீங்கள் அந்தக் கொள்கை அடிப்படையிலேயே இன்றைய தினம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் வகுப்பதன் காரணமாகப்போடுகிற திட்டங்களினால் பலன் கிடைக்கிறது என்றாலும்கூட—அது குறுகிய அளவுக்குக் கிடைக்கிற பலனாக இருந்தாலும்—பெருகிய அளவில் கிடைக்கிற பலனாக இருந்தாலும்—சமுதாயத்திற்குப் போய்ச் சேராது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இதை விளக்கிப் பேசுகின்ற நேரத்தில் மிக அருமையான கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

மிக அருமையான கருத்து என்பது மட்டும் அல்ல; மிகப் புதுமையான கருத்தும்கூட. மிகப் புதுமையான கருத்து என்பது மட்டும் அல்ல; அவர்கள் கட்சியே அதை ஏற்றுக்கொண்டதா இல்லையா என்பதைக்கூட எண்ணிப்பார்க்காமல் மிகத் துணிச்சலாகச் சொன்ன கருத்து. அந்தக் கருத்து என்னவென்றால்; "பொருள் உற்பத்தி பெருகப் பெருக, தொழில்வளரவளர, அதில் கிடைக்கக்கூடிய இலாபம், தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய உரிய பங்கு அவர்களிடத்தில் போய்ச் சேர்ந்தாலொழியத் தொழிலாளர்களுக்கு உள்ளுணர்ச்சி ஏற்படாது. உற்சாகம் ஏற்படாது. ஆகையால் உற்பத்தி பெருகப் பெருக, இலாபம்வளரவளரந், தொழிலாளர்களுக்கு அதன் பங்கு போய்ச் சேரவேண்டும். ஆனால், அந்தப் பணத்தை அவர்கள் எப்படிச் செலவழிக்கிறார்கள் என்பதைக் கவனிக்கலாம். அவர்கள் ஆடம்பரத்தில் செலவிட்டால் அதைத் தடுக்கலாம். வாழ்க்கைத் தரத்தை மிக அதிகமாகப் பெருக்கிக்கொள்ள ஆரம்பித்தால்—சீராக ஒரு நிலையில் இருக்கும்படி செய்து—அவர்களிடத்தில் மிஞ்சுகின்ற பணத்தைச் சிறு சேமிப்புத் திட்டமாகச் சேகரித்து அப்பணத்தைத் திட்டங்களின் முதலீட்டுக்குப் பயன்படுத்தலாம்" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இதே சட்டமன்றத்தில்—சென்ற ஆண்டு என்று கருதுகிறேன்—உற்பத்தி பெருகவேண்டுமானால், தொழிலாளர்களுடைய கூலி இனி உயரவே கூடாது. அவர்களுடைய கூலி கட்டுப்படுத்தப்படவேண்டும்என்று பேசியஉறுப்பினர்கள்இதைக்கேட்டு ஒரு பெரிய அதிர்ச்சிக்கு உள்ளாகியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். உற்பத்தி அதிகமாக வேண்டும், அதிகமாகவேண்டும் என்று பேசப்படுகிற நேரத்தில் உற்பத்தியைப் பெருக்காமல் இருக்கிற பெரும் குற்றம் தொழிலாளர்களையே சார்ந்தது, தொழிலாளர்கள் தங்கள் கூலியை உயர்த்தவேண்டும், உயர்த்தவேண்டும் என்று கிளர்ச்சி செய்துகொண்டே போவதனால் உற்பத்தியைப் பெருக்கவேண்டும், அதிக மூலதனமிட்டு அதிகப்படுத்தவேண்டும் என்கிற அக்கறை முதலாளிமார்களுக்கு ஏற்படாமல் போகிறது என்று இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துப் பேசியவர்களுடைய கருத்துக்களை எல்லாம் தகர்த்து எறிகின்ற முறையில் நமது மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தொழில் வளர வளர, இலாபம் பெருகப் பெருகத் தொழிலாளர்களுக்கு அதன் பங்கு போய்ச் சேரவேண்டும் என்று துணிச்சலோடு சொன்னார்கள் என்றால், உண்மையில் அந்தக் கருத்து வரவேற்கத் தக்கதாகும். தேம்ஸ் நதிக் கரையில் உலவுவதற்கு முன்னால், கூவம் நதிக்கரையில் இருக்கிற கொள்கையைக் கைவிட்டு விட்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். அவர்களுடைய இலண்டன் பயணதில் அவர்கள் பார்க்கவேண்டிய பல காட்சிகளோடுகூட—இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக அந்நாட்டுப் பொருளாதார நிபுணர்கள், அரசியல் தத்துவ அறிஞர்கள் ஏற்படுத்தி வைத்த இலட்சிய விளக்க இடங்களுக்குச் சென்று, இங்கிலாந்து நாட்டில் தொழிற் புரட்சி ஏற்பட்ட நேரத்தில் தனிப்பட்ட முதலாளிகள் அடித்துக்கொண்டிருந்த கொள்ளை இலாபம் எவ்வாறு கட்டுப்படுத்தப்பட்டது என்பதையும் அறிந்துகொண்டு வருவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. ஆனால், அரசாங்கச் சார்பில் செல்பவர்களுக்கு அந்தச் சந்தர்ப்பம் எளிதில் கிடைப்பது இல்லை. ஆனாலும் அந்தச் சந்தர்ப்பத்தை நிதி அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

"கனம் சுப்பிரமணியம்:— ஏற்படுத்தப்பட்டிருக்கிறது".

ஆகையால் அவர்கள் இலண்டன் போவதற்கு முன்னால் நல்லதொரு தத்துவத்தை இங்கே சொல்லிவிட்டுப் போவதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். மேல்நாடுகளில் நல்லவிதமாகச் சுற்றுப்பிரயாணம் செய்து, காணவேண்டிய இடங்களை எல்லாம் கண்டு, பெறவேண்டிய அநுபவங்களை எல்லாம் பெற்று, பெற்றதை ஒன்றுகூட ஒளிக்காமல் இந்த இடத்தில் எடுத்துச்சொல்லி, நல்லவற்றையெல்லாம் இங்கும் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இலண்டன் பயணம் வெற்றிகரமாகவேண்டும் என்ற என் நல்லெண்ணத்தையும், வாழ்த்தையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழிலாளர்களுக்குரிய பங்கை அதிகப்படுத்த, அந்தப் பங்கை அவர்கள் வீணாக்கவிடாமல், விரயமாக்கவிடாமல், மூலதனத்திற்கே திரும்பப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்ற கருத்தை இதற்கு முன்னால் இத்திட்டத்தைப்பற்றிப் பேசியவர்கள் எல்லாம் எங்காவது எடுத்துச் சொல்லியிருக்கிறார்களா இல்லையா என்று நேற்றும், முன்தினமும் எல்லா ஏடுகளையும் துருவித் துருவிப் பார்த்தேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட விவாதத்தின்போது ஒரே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்து இதற்கு ஒத்ததாக இருந்தது. இலாபம் பெருகப் பெருகத் தொழிலாளர்களுடைய கூலியை உயர்த்தி,

# மாறுபட்டது — முரண்பட்டதல்ல!

வேண்டுமானால் அந்த உயர்வுக்கூலியை அவர்கள் விரயமாக்கிவிடாமல், விலைவாசியைக் கட்டுப்படுத்தி, அப்பணத்தை நீங்கள் புதுத்தொழில்களுக்கு எடுத்துக் கொள்ளுங்கள் என்று அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. தேஷ்முக் அவர்களை ஒரு உறுப்பினர் கேட்ட நேரத்தில், "இது நல்ல யோசனை தான். ஆனால் செல்வம் சமுதாயத்தில் பரவலாகப் போய்ச் சேர்ந்துவிட்டால் அதைத் திரும்பப் பெறுவது சிரமமாக இருக்கும். எவ்வளவு பரவலாகப் பிரிந்து சென்றிருக்கிறது; அவற்றைத் திரட்டுவது என்றால் எந்த அளவுக்குக் கிடைக்கும் என்று கணக்கெடுத்துப் பார்த்துத் திட்டங்களையும் போடமுடியாது. ஆக, இப்படி இரண்டு சங்கடங்கள் இருக்கின்றன" என்று எடுத்துப் பேசியிருக்கிறார்கள். அது தவிர, இதைப் பற்றி அதிகமான அளவுக்கு விவாதிக்கப்படவில்லை. ஆகவே, இன்றைய தினம் இந்தக் கருத்தை தெள்ளத் தெளிவாக நமது சபையில் எடுத்துச் சொல்லிய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதோடு நிற்காமல் மத்திய சர்க்காரிடத்திலும் எடுத்துச் சொல்லி அவர்களை இதற்கு இணங்கச் செய்யவேண்டிய பொறுப்பையும் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்தக் கருத்தை அதிக அக்கறையோடு அவர்கள் தெரிவித்திருப்பதன் காரணத்தினால், இதனுடைய சாதக பாதகங்களை எல்லாம் அவர் நன்றாக ஆராய்ந்து பார்த்துத்தான் இந்த முடிவுக்கு வந்திருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. அப்படி ஒரு நிலைமை ஏற்படுமானால், உண்மையில் தொழில்துறையில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களிடத்திலே, உற்பத்தியைப் பெருக்குகின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள தொழிலாளர்களிடத்திலே ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். தங்களுக்கு நல்வாழ்வு கிடைக்கும், நாட்டின் பொது நன்மைக்கும் பயன்படும் என்கிற உள் உணர்ச்சி ஏற்படுமானால், அவர்கள் செய்கின்ற பொருள்களுடைய அளவு பெருகும் என்பது மட்டும் அல்ல, செய்யப்படுகின்ற பொருள்களுடைய தரமும் நிச்சயமாக உயரும். இன்றைய தினம் பொருள் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது என்று சொல்லலாம். ஆனால், பொருளினுடைய தரத்தில் தொழிலாளர்கள் அக்கறை காட்டுகிறார்கள் என்று சொல்லமுடியாது. இதற்குக் காரணம் என்னவென்றால், இந்நாள் வரையில் நமது நிதி அமைச்சர் உட்பட, காங்கிரஸ் மேலிடத்தில் உள்ளவர்கள் வரையில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்றார்களே தவிர, தரத்தைப் பற்றிக் கவலை காட்டியதில்லை. அதுவும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் மிக நல்ல முறையில் கற்பனை உலகில் மட்டும் அல்ல, கவிதா உலகத்திலும் உலவுகின்றவர்போலப் பேசிவந்திருக்கிறார்கள். அதைப் பார்த்துமற்றவர்களுக்கும் "பிரித்துக்கொடுக்கவேண்டுமென்று சொல்கிறீர்களே, ஏழ்மையைப் பிரித்துக் கொடுப்பதா? வறுமையைப் பிரித்துக்கொடுப்பதா? செல்வத்தைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்றால் எங்கே செல்வம் இருக்கிறது?" என்று கேட்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுடைய கருத்து, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் கொண்டிருக்கிற கருத்துக்கு ஓரளவு மாறுபட்டது என்று நான் கருதுகிறேன். நான் மாறுபட்டது என்று சொல்கிறேனே தவிர, முரண்பட்டது என்று சொல்லவில்லை. ஆகையால் இன்னும் சிரமம் எடுத்துக்கொண்டால், தம்முடைய கருத்துக்குப் பண்டித நேரு அவர்களை இசையச் செய்யமுடியும் நம்முடைய நிதி மந்திரி அவர்களால். ஆகவே அந்தப் பொறுப்பையும் இவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்,

இந்தத் தொழில்துறையில் முதலிலே செல்வத்தைப் பெருக்கவேண்டும், அதற்குப் பின் பிரித்துக் கொள்ளவேண்டும் என்று சொல்கிறபோது, ஜூலை மாதம் முழுவதும் உற்பத்தியைப் பெருக்கவேண்டும், ஆகஸ்டு மாதம் முழுவதும் கணக்குப் பார்க்கவேண்டும், செப்டம்பர் மாதத்தில் பிரித்துக்கொடுக்கவேண்டும் என்று சிலர் தவறாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியைப் பெருக்குவது ஒரு சமயம், பிரித்துக்கொடுப்பது மற்றோர் சமயம் என்றல்ல. இரண்டும் ஒரே காலத்தில், இரண்டும் தொடர்ந்து செய்யப்படவேண்டிய விஷயங்களாகும். இதையும் நிதி அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தியதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் துவக்குகிற நேரத்தில், நாம் எந்தச் சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதையும் கவனித்துப்பார்க்கவேண்டியது முக்கியம். இன்னும் வைதிக பாஷையில் சொல்வதானால், சுப சகுனத்தில் துவக்கப்படுகிறதா, அபசகுனத்தில் துவக்கப்படுகிறதா என்று பார்க்கவேண்டும். பொருளாதார பாஷையில் சொல்லவேண்டுமானால், இவ்வளவு பெரிய பாரத்தைத் தாங்குவதற்குரிய சக்தி உடையதாகச் சமுதாயத்தைத் தயாரித்துவிட்டு, இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோமா இல்லையா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்க்கும்போது வைதிக பாஷையை நான் பயன்படுத்த விரும்பவில்லை. நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஓரளவு வைதிக கோலத்திலே இன்று காணப்பட்டாலுங்கூட (சிரிப்பு) பொருளாதார பாஷையை பயன்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு "வைதீகத்தில் கெடுதல் இல்லை") அதனால்தான் வைதீகம் என்று சொன்னேன், அடைமொழி வைக்கவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் துவக்கப்படும் நேரத்தில், எல்லா விலைவாசிகளும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருந்ததைவிட 100-க்கு 20. பங்கு உயர்ந்திருக்கிறது. இந்த நேரத்தில் நாம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தீட்டியிருக்கிறோம். முன்னாலே 100-ரூபாயில் முடிக்கப்படக்கூடிய காரியத்தை இப்பொழுது இயற்கையாகவே பொருளினுடைய விலை ஏறி இருப்பதால், 120 ரூபாய் செலவிட்டால்தான் முடியும். இதைப்பற்றிய விவரங்களை, நிதி அமைச்சர் அவர்கள் ஆயிரம் கோடி எப்படி வளருகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நான் எடுத்துச்சொல்வது மூன்றாவது திட்டத்தைத் தீட்டுகிறநேரத்தில், அப்படிப்பட்ட நெருக்கடிக்கு இடையிலேதான் நாம் திட்டம் தீட்டுகிறோம் என்பதுதான். அதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதைப்போலவே அந்நிய செலாவணிப் பிரச்சினையில்

# மாநில அரசுக்கு மனு அனுப்பும் அதிகாரம் மட்டுமே!

நமக்கு முன்பு இருந்ததைவிடச் சிக்கல் அதிகரித்திருக்கிறதே தவிர, அதிகமான அளவு அந்தச் சிக்கல் தீர்க்கப்பட்டதாகத் தெரியவில்லை. வெளியே இருந்து வரவழைக்கும் பொருளினுடைய அளவைக் கட்டுப்படுத்தமுடியும் எனினும், இன்று அந்நிய செலாவணி விஷயத்தில் சிக்கல் வளர்ந்திருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு அந்நிய செலாவணி அதிகம் தேவையாக இருப்பதால், அப்படிப்பட்ட நெருக்கடியைச் சமாளித்துக்கொண்டுதான் திட்டத்தை நிறைவேற்றவேண்டியவர்களாக இருக்கிறோம். இதிலே வெளிநாட்டிலிருந்து வரவழைக்கும் பொருளினுடைய அளவையும் இங்கிருந்து வெளிநாட்டுக்கு அனுப்பப்படவேண்டிய பொருளினுடைய அளவையும் வகைப்படுத்தவேண்டும். இங்கிருந்து வெளிநாட்டுக்கு அதிகமான பொருளை அனுப்பி அந்நிய செலாவணியைச் சம்பாதித்து ஆகவேண்டும். ஆகையால் இந்த இரண்டு மூன்று முக்கியமான காரியங்கள் சரியாக நடத்தப்படவேண்டும். இதைச் சொல்லும், நேரத்தில் இவைகளை நடத்தமுடியுமா முடியாதா என்ற ஐயப்பாட்டுக்காக அல்ல, இவைகளை நடத்துகிற பொறுப்பு இந்த மாநில அரசுக்கு இல்லை, மாநில அரசிலே சில அமைச்சர்களுக்கு அதற்கேற்ற திறமை இருக்கலாம், மத்திய அரசிலே செய்யும் காரியங்களிலே பல குளறுபடியாக இருக்கின்றன என்று உள்ளூரத் தெரிந்தும் இருக்கலாம்; ஆனால் அந்நிய செலாவணி விஷயத்தைக் கட்டுப்படுத்தும் விஷயம், ஏற்றுமதி, இறக்குமதி விஷயங்களிலே ஏற்றுமதியை அதிகப்படுத்தி, இறக்குமதியைக்கட்டுப்படுத்தக்கூடிய அந்தக் காரியம் செய்கின்ற விஷயத்திலே அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாத காரணத்தால், இந்த விஷயத்திலே மத்திய அரசாங்கம் எவ்வளவு திறமையாக நடக்கிறார்களோ, அதைப் பொறுத்துத்தான் நம்முடைய மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உயிர் இருப்பதா? இல்லாமல்போவதா? குத்துயிராக இருப்பதா? என்று தீர்மானிக்கப்படவேண்டியிருக்கிறது.

ஆகையால்தான், பல தடவை எடுத்துச்சொன்னதுபோல், இந்த முறையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எப்படித் தனிப்பட்ட அங்கத்தினர்கள் அமைச்சர்களைப் பார்த்து, "இந்த ஏரிக்குக் கரையை உயர்த்திக்கொடுங்கள், குளத்தின் படிக்கட்டை அகலப்படுத்திக்கொடுங்கள், அமோனியம் சல்பேட் கொடுங்கள்" என்று கேட்கிறார்களோ, அதைப்போல், இங்கே இருக்கும் அமைச்சர்கள் அங்கே சென்று எங்களுக்கு இன்னது தேவை என்று கேட்கிற நிலை இருக்கிறதே தவிர, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கத்தக்க அளவிற்கு இந்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. அதைச் சொல்லும் நேரத்தில், திரும்பத் திரும்ப இதையே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று முன்னாலே எல்லாம் அருவருப்பு அடைந்தார்கள். ஆனால், இந்த முறை நிதி அமைச்சர் அவர்கள் அருவருப்பு அடையமாட்டார்கள் என்று கருதுகிறேன். அவர்களே சொல்லியிருக்கிறார்கள் — "நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் உள்ளவர்கள் அருவருப்பு அடைந்தாலும் பரவாயில்லை, இது என்ன பெரிய நியூசன்சாகப் போய்விட்டதே என்று எண்ணினாலும் பரவாயில்லை. நான் திருப்பித் திருப்பி ரீஜினல் டிஸ்பாரிடி போகவேண்டும் போகவேண்டுமென்று எடுத்துப் பேசினேன் என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதையே அருவருப்பாகக் கருதுவார்கள் என்று ஏற்படுமானால் நான் சொல்லுவதை அருவருப்பாகக் கருதுவதிலே ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அருவருப்பாக உள்ள கசப்பான உண்மைகளை எடுத்துச்சொல்லத்தான் வேண்டுமென்ற முடிவுக்கு கனம் நிதி அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் வந்திருப்பார்களானால், அதே முடிவுக்கு நாங்கள் இங்கே வந்தால் அதைத் தவறாகக் கருதமாட்டார்கள் என்று கருதுகிறேன். திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், இந்த மாநில அரசுக்குப் பொருளாதாரத்துறையைச் செம்மைப்படுத்தத்தக்க அதிகாரம் இல்லாத காரணத்தால்தான், எவ்வளவு திட்டங்கள் தீட்டினாலும் அதை நிறைவேற்றிச் செல்வதிலே ஏற்படக்கூடிய சாதக பாதகம் அத்தனையும், மத்திய சர்க்கார் எப்படி நடக்கிறார்களோ அதைப்பொறுத்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லுவேன், நம்முடைய தொழில் இங்கே வளரவேண்டுமானால், நம்முடைய செல்வம் பெருக வேண்டுமானால், துறைமுகங்கள் எல்லாம் விருத்தி செய்யப்படவேண்டும். முக்கியமாகத் தூத்துக்குடித் துறைமுகம் சேதுசமுத்திரத் திட்டத்தோடு இணைந்திருக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் எடுத்துப்பேசினோம். நெய்வேலி நிலக்கரித் திட்டத்தை விரைவில் நிறைவேற்றி, அதன் அளவையும் வகையையும் அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறோம்.

சேலத்து இரும்பை உருக்குந் தொழிலுக்கு பயன்படுத்தி விரைவில் முன்னேற்றம் காணவேண்டுமென்று நாம் எடுத்துப் பேசுகிறோம். இந்த மூன்று பிரச்சினைகளில்—நம் மாநில அரசை நடத்திச் செல்கிறவர்களை நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் — உங்களுக்குள்ள அதிகாரங்கள் என்ன? மனுப்போடுவதைத் தவிர, மகஜர் அனுப்புவதைத் தவிர, வற்புறுத்துவதைத் தவிர, திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வதைத் தவிர, உங்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் என்னஎன்பதை எண்ணிப்பார்த்தால், அதிகாரம் அற்ற ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் உணர்ந்திருப்பதைப் போலவே, நீங்களும் உணர்வீர்கள் என்று கருதுகிறேன். ஆகையால்தான் சென்னை இராஜ்யத்திற்குத் தரப்பட்டிருக்கும் இந்த மூன்றாவது திட்டத்தைப்பற்றிய குறிப்பேடுகளைப் பார்த்தால், நாங்கள் இந்த மாநிலத்தில் மின்சாரத் துறைகளின் அளவு அடைபட்டிருக்கும்காரணத்தால், அணு உலையை ஏற்படுத்தித் தீரவேண்டுமென்ற முடிவுக்கு நாங்கள் வந்துவிட்டோம். இந்த முடிவை ஏற்றுக்கொள்ளும்படி மத்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறோம், ஏற்றுக்கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் வலுவடைந்துவருகிறது. இருந்தாலும் வற்புறுத்தப் போவதில்லை, என்று கூறப்பட்டிருக்கிறது. உங்களால் இந்தப் பாஷையிலேதான் பேச முடிகிறது. ஆராய்ந்து பார்ப்போமானால் அணு உலைக்கூடம் வேண்டுமென்று கேட்ட முதல் மாநில

# சமதர்மம் சரிகிறது!

அரசு நம்முடைய மாநில அரசுதான். மற்ற மற்ற மாநிலங்களெல்லாம் சாதாரணமாக நீரிலிருந்து மின்சாரம் எடுக்க வசதிகள் மிக அதிகமாகப் பெற்றிருக்கின்றன. நம்மிடத்திலிருந்த வசதிகள் அத்தனையும் மிகத் திறமையாகப் பயன்படுத்திப் பிற மாநிலங்கள் பார்த்துக்கூட எப்படி இவ்வளவு மின்சாரத்தைப் பெருக்கினீர்கள் என்று கேட்கத்தக்க அளவ பெருக்கியான பிறகு, நமக்கு அணு உலைக்கூடம் அமைத்தாலொழியத் தொழில்துறைக்குத் தேவையான மின்சாரத்தைப் பெறமுடியாது என்பதை இன்று அல்ல, நேற்று அல்ல, 10 ஆண்டுகளாகத் துரைத்தனத்தவர்க்கு அறிவித்திருந்தும், அவர்கள் காதிலே வாங்கிக்கொண்டு கருத்திலே வாங்கிக்கொள்ளாத காரணத்தால், அது மகாராஷ்டிரத்தில் வருவதைப் பார்க்கிறோம். இதற்கு இவர்கள் சொல்வது "அதுவும் ஒரு வகையில் நன்மைதான். அது எப்படி அங்கே நடக்கிறது என்று பார்த்து, நன்றாக நடந்தால் பிறகு நாம் ஏற்படுத்திக் கொள்ளலாம்" என்பதாகும். இது பக்கத்து வீட்டுப் பிள்ளையைக் கிணற்றில் இறக்கி ஆழம் பார்ப்பது என்று சொல்வார்களே, அதுபோல் இவர்கள் பேசிப் பார்க்கிறார்கள். மற்ற விதத்தில் ஏக இந்தியா என்று பேசுகிறார்கள். அவர்களுக்கு நஷ்டம் வந்தால் வரட்டும், அதைப் பார்த்துவிட்டுப் பிறகு வேண்டுமானால் பார்த்துக்கொள்ளலாம் என்று பேசுவது என்றால், நீங்கள் மத்திய சர்க்காருக்காக வாதாடுகிறீர்கள். மத்திய சர்க்காரினுடைய வழக்கறிஞராக நீங்கள் நடக்கிறீர்கள். அதற்கேற்ற கட்டணத்தைப் பெறுகிறீர்கள். ஆகையால்தான் அந்த முறையைக் கைவிட்டு இந்த மாநிலத்திற்குத் தேவையானது அத்தனையும் நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை நீங்கள் மத்திய சர்க்காரிடத்திலே கேட்டுப் பெறவேண்டுமென்று நான் கூறவிரும்புகிறேன்.

இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இருக்கும் அந்தக் குறைபாடு, நமக்கு இருக்கும் இரயில்வே வசதிகளைப் பார்க்கும் நேரத்தில் இன்னும் பளிச்சென்று தெரிகிறது. தொழில் வளரவேண்டுமானால் இரயில்வேக்கள் வளர்ச்சி அடைந்திருக்க வேண்டும். இரயில்வேக்கள் வளர்ச்சி அடைந்திருந்தால்தான், தொழில் துறை வளர்ச்சிக்கான நிலைமை ஏற்படும். 'பயித்தியம் தீர்ந்தால்தான பெண் கொடுப்பார்கள். பெண் கொடுத்தால்தான் பயித்தியம் தீரும்' என்ற பழங்கதைபோல், அதை நாம் திருப்பத்திருப்பப் பேசிக்கொண்டிருக்கிறோம். அப்படிப் பேசுகிறபோது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியத் துரைத்தனத்தார் அமைக்க இருக்கும் இரயில்வேக்களில் 1200 மைல் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 1200 மைலில் நம்முடைய தமிழகத்தில் மட்டும் அல்ல, தென் பகுதிக்கே அதிகமான அளவு அக்கரை காட்டவில்லை என்பதுபற்றிப் பாராளுமன்றத்தில் பேசியதைப் படித்துப்பார்த்தால், உண்மையிலேயே எவ்வளவு தேசியப் பற்று உள்ளவர்களாக இருந்தாலும் நெஞ்சம் நோகும். தென் பகுதிக்குஒருமைல் அளவுக்குக்கூடப்புதிய இரயில்வே பாதை அமைக்கமுடியவில்லை என்று அங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எல்லாக் கதவுகளும் அடைக்கப்பட்டுத்திறந்துவிடப்பட்டிருக்கும்ஒரே ஒரு ஜன்னல் பக்கமாக முகத்தை வைத்துக்கொண்டு தென்றல் வீசுகிறபோது முகத்தை அந்தப் பக்கத்திலே திருப்பி, நீங்கள் உயிர்பிழைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லத்தக்க அளவிற்கு மாநில அரசு இருக்கிறது. அதனால் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆகையால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி நான் சொல்லுகிற முதல் கருத்து, அதை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஆற்றல், அதிகார பலத்தை நம்மிடத்திலே ஒப்படைக்காமல் வேறு இடத்தில் குவிக்கப்பட்டிருக்கிறது. முதலிலே, குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டாலொழிய, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கில்லை என்பதை நான் எடுத்துச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நான் காணுகின்ற மற்றொரு குறை — முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலே இருந்ததைவிட ஒன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே சமதர்மத் தத்துவம் மெள்ளச் சரிந்துவிட்டு இருக்கிறதென்று சொல்வதைவிட, இது தெரிந்தே தூக்கி எறியப்பட்டிருக்கிறதென்று நான் சொல்லுவேன்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாங்கள் சோஷியலிஸ பாட்டர்ன் போல் திட்டம் வைத்திருக்கிறோம் என்று பேசப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நாங்கள் சமதர்மத் திட்டத்தையே வைத்திருக்கிறோம் என்று வலியுறுத்தப்பட்டது. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அதன் புள்ளிவிவரங்களைப் பார்க்கிற நேரத்தில் சமதர்மத்திட்டம்அடியோடு கைவிடப்பட்டதா என்று சந்தேகிக்கும் விதத்தில் பொதுத்துறையைக் குறைத்துத், தனியார் துறையை அதிகப்படுத்தியிருப்பதைப் பார்க்கிறோம். இரண்டாவது திட்டத்தில் போடப்பட்டதைவிட இந்த மூன்றாவது திட்டத்தில் தனியார் துறைக்கு அதிகமான அளவிற்குத்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்றாவது திட்டத்தைப்பற்றிக் குறிப்பிலே தரப்பட்டிருக்கிறது:-

> It will be seen that as compared to the levels of private investment in the Second Plan as now estimated the Third Plan proposes a substantial step-up mainly in the field of large and medium industries from 700 crores to 1050 crores.

என்று இதில் எழுதப்பட்டிருக்கிறது. நாம் சமதர்மத்தை நோக்கி நடந்துகொண்டிருக்கிறோம் என்று பேசுகிறார்கள். நேரு அவர்கள் அந்தப் புனிதமான பயணத்தில் ஈடுபட வாருங்கள் என்று எல்லோரையும் அழைக்கிறார். அந்தப் பயணம் எங்கு அழைத்துச் செல்கிறது என்று பார்த்தால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தரப்பட்டிருப்பதைவிட அதிகமாகத் தொகை, அக்கரை, அதிக கவனம் தனியார் துறைக்குத் தரப்பட்டிருக்கிறது. அதுவும் "லார்ஜ் அண்ட்

(13-ம் பக்கம் பார்க்க)

# அந்திக்கலம்பகம்

நீயாக, வராவிட்டாலும், நானே வந்து உன்னைப் பார்ப்பது என்று தான் பொன்னி! வந்திருக்கிறேன்...

வா! வா! ஏழையின் குடிசையிலே தங்கள் பாததூளிபட்டது என் பாக்யம் அல்லவா...

பொன்னி...... ஏது... நாடகம் பார்த்துவிட்டு வந்ததாலே இப்படிப் பேசுகிறயா... போக்கிரி!

நாடகம் பார்க்கவே இல்லையே...

சொன்னயே, பார்க்கப்போவதாக...

நாடகம் நடந்தால்தானே, பார்க்க! மழை, நடத்தவில்லை...

அப்படித்தான ஆகவேண்டும். எங்களை யாரையும் கூப்பிடாமல், நீ மட்டும் போய்ப் பார்த்துவிட்டு வர நினைச்சயே, நடந்ததா-வேணும் உனக்கு...

அதுகிடக்கட்டும். மறுபடியும் நாடகம் நடக்கும்போது, கட்டாயமாக அழைத்துக்கொண்டு போகிறேன்.

பொன்னி! ஒரு அக்ரமம் தெரியுமா, உனக்கு.

அக்ரமம் எனக்கு எப்படித் தெரியும்?

ஆமாமாம்... அதிசயம்னு உனக்குத் தெரியும்.

ஊர் உலகமே அதிசயப்படுதே, கேளவிப்படவில்லையா; முன்னாலே நாய்க்குட்டிகளை அனுப்பினர்களே, வானலோகம்; இப்போது, மனிதர்களே, போயாச்சி...

உண்மையாகவே ஆச்சரியமாத் தாண்டி பொன்னி! இதை எல்லாம கேட்கும்போது இருக்கு. என்னமா, முடிஞ்சுது இதெல்லாம் சாதிக்க?

எல்லாம் விஞ்ஞான அறிவுதான் காரணம். ஆராய்ச்சி வேகம் அங்கே அப்படி இருக்குது...

நம்ம நாட்டிலே, எப்போதுமே ஆராய்ச்சியே, நடந்ததில்லையா?

அதென்ன அப்படிக் கேட்டுவிட்டே. ஆராய்ச்சி நடந்திருந்தா, அதற்கான அடையாளம், இருக்க வேண்டுமே. இருந்துதான, காட்டு பார்ப்போம். எந்தக் காலத்திலே பெரியவங்க கண்டுபிடித்தாங்களோ அகல விளக்கு, குத்துவிளக்கு. அதோடு நாம நின்னுவிட்டமே... மற்ற இடத்திலே இதுபோலதான்னு இருந்துவிட்டிருந்தா, எலக்ட்ரிக் வந்திருக்குமா...?

பார்க்கப்போனா, எல்லா அதிசயப் பொருளும, வெளிநாடுகளிலே தான் கண்டுபிடிச்சானனு சொலலணும்...

ஆனா ஒண்ணு, நம்ம நாட்டிலேயும் சில தினுசான அதிசயம கண்டுபிடிக்கபபட்டுப பேபபர்லே போடுகிறார்கள்...

அதென்ன, பொன்னி! நம்ம நாட்டு அதிசயம்?

இருபது பிள்ளை பெத்த அதிசயம — இரண்டு தலை ஆட்டுக்குட்டி பிறந்த அதிசயம்...

**சி. என். ஏ.**

போடி, குறும்புக்காரி! நீ அதைச் சொல்றியா... நான் என்னமோ, மற்ற மற்ற நாடுகளிலே கண்டு பிடிக்கறதுபோல ஏதாவது அதிசயம்தான கண்டுபிடிச்சாளோ என்னமோன்னு எண்ணிக்கொண்டேன்.

நம்ம ஊர்ப் பேப்பர்காரர்களுக்கு ஒரு ஆசை. அந்தந்த நாடுகளும ஏதேதோ அதிசயம அதியமனு போடுமபோது, நாமும் எதையாவது போடனுமேனனு ஆசை. போனவாரம, போட்டிருக்காங்க பேப்பர்லே, ஒரு பெண்ணு திடீர்னு ஆணாயிட்டாளாம்...

இதென்னடி வேடிக்கையா இருக்கு. விபரீதமாக இருக்குதே! பெண்ணு, ஆணாயிட்டாளா?

ஆமாம்... பேப்பர்லே இருக்குது எப்படி, ஏன்னு பார்க்க, கூட்டம கூட்டமாப் போயும் பிரயோஜனம் இல்லை. பெண்ணைப்போட்டுப் பூட்டி வைத்துவிட்டார்களாம்.

பூட்டி வைத்தது எதுக்கு? அதிசயம்னுதானே, ஜனங்கபோய்ப் பார்க்கப்போறாங்க.

ஆமாம். ஆனா. அது ஒரு சமயமா புளுகா இருக்கும். புரட்டு வெளியாகிவிடுமேன்னு எங்கிற பயத்தாலே, யாரும பார்க்கக்கூடாதுன்னு ஏற்பாடு செய்துவிட்டிருக்கக்கூடும்.

இருக்கும்... இருக்கும்...

இபபடி ஏதாவது அதிசயம் நடபபதாகக் கேளவிப்பட்டா, உடனே சர்க்கார் நடவடிக்கை எடுக்கணும். பெரிய டாக்டர்களை அனுப்பிச் சோதனை நடத்தி, உண்மையாகவே இது அதிசயமதானா? உளளபடி என்ன நடந்ததுன்னு விசாரித்து, ஊருக்குச் சொல்ல வேண்டும.

ஆமாம...ஏன் சர்க்கார் அப்படிச் செய்யல்லே?

என்னடியம்மா, என்னை அந்தக் கேளவி கேட்கிறயே! நான் என்ன, மந்திரிசபைக் கட்சியைச் சேர்ந்தவளா......!

உனக்குத் தெரியுமா விஷயம், திருவனந்தபுரத்திலே, மாதர் மகாநாடாம், ரொமப நல்லா நடந்ததாம். நம்ம நகைக்கடை நாராயணச் செட்டியார் பெண் இருக்காளே, நீலா, அவ, போயிருந்தாளாம்... பொன்னி! திருவனந்தபுரத்திலே 'உயிர்க்காலேஜ்' இருக்கே, ரொம்ப நல்லா இருக்காம்டி.

மாதர் மகாநாட்டுக்குப்போன நீலா, சிங்கம் புலி காடியைத்தான் பார்த்துவிட்டு வந்தாளா?

ஒவ்வொண்ணுக்கும் ஒரு எடுப்பு எடுக்கறதுதான, உன வேலையாச்சே. மகாநாட்டுக்குப் போனா, என்ன? ஊரைச் சுத்திப்பார்க்க மாட்டாளா? போனதிலே இருந்து திரும்பிவர்ர வரைக்கும், மகாநாட்டிலேயேவா, உட்கார்ந்திருப்பா...

யார் சொல்லமுடியும் அப்படி! இபபடி, மகாநாடுன்னு சொல்லிட்டுக் கிளம்பறதே, ஊர் சுத்தத்தானே!

இப்பல்லாம், பார்த்தாயடி பொன்னி! உல்லாசப் பிரயாணத்துக்குன்னே, நிறைய பஸ்கள் கிளம்புது. நேற்றுக்கூட, நம்ம வீட்டுக்கு மதுரையிலேயிருந்து என்னோட மச்சினனுக்கு வேண்டிய

வங்க வந்தாங்க. பத்துநாள் ஆச்சாம். பல ஊர் பார்த்துவிட்டு வந்திருக்காங்க.

அப்படியா......? நீலாகூட அப்படித்தான் போய்வந்தாளா?

செச்சே! நிலா, மகாநாட்டுக்குன்னே தான் போயிருந்தாளாம். அவளுடைய அக்கா, பெண்கள் இலாகா என்னமோ இருக்காமே, அதிலே வேலையிலே இருக்காளே. சம்பளம் என்னமோ, முன்னூறு, நானூறுன்னு சொன்னாள்.

ஐநூறுகூடத் தருவாங்களே. பெரிய இடத்துப் பெண்களாக இருந்தா, கேட்ட சம்பளம் கிடைக்கும். அதிலேயும் மந்திரிகள் வீட்டுப் பெண்கள்னு சொன்னா: இன்னும் நிறையச் சம்பளம் உண்டு. செலவுக்கும் பணம் தருகிறார்கள்.

நிலாவோட அக்கா, விதவையடி பாவம். புருஷன், டைபாயிட்டிலே போயிட்டான். இவ பாவம், ஒரு சுகத்தையும் காணாதவ.

இவ்வளவு சீர்திருத்தம் பேசறவ' மறு கலியாணம் செய்துகொள்வதுதானே......

எப்படி பொன்னி, முடியும்? பெரிய குடும்பம், அவர்களோட குடும்பத்திலே எல்லோருமே படித்துவிட்டுப் பெரிய பெரிய உத்யோகத்திலே இருக்கிறாங்க.

அவ்வளவு படித்தவர்களிடமிருந்துமா, நீலாவோட அக்காவை மறுமணம் செய்துகொடுக்க முடியவில்லை—மனம் வரவில்லை.

சொந்தக்காரர்கள், இடம் தருவார்களோ? அவ, அப்படி நடந்துவிட்டா, மத்தப் பெண்களைக் கட்டிக்கொள்ள எவன் வருவான்? துப்புக்கெட்டவளா இருக்கறயே.

இந்த இலட்சணத்துக்கு, மாதர் மகாநாடு ஏன் போகணும்?

பெரிய பெரிய தலைவர்களெல்லாம் வந்தார்களாமே—கவர்னர் முதற்கொண்டு வந்தாராம்.

ஆமாம், எனக்குக்கூடச் சொன்னார்கள். மொரார்ஜி தேசாய் என்கிற மந்திரி வந்தாராம். ஏன் வந்தார்னு தெரியுமா உனக்கு? அது உண்மையோ இல்லையோ எனக்குத் தெரியாது; மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம்னு ஒன்று வர இருக்குதே, அதறகு நிறையத் தங்கம் வேணுமாம்.

தங்கம் வாங்கவா வந்தார் திருவனந்தபுரம். அங்கே, தந்தத்தாலே செய்த சாமான்கள் அல்லவா விசேஷம்.

தங்கம் வாங்க வரவில்லை. பெண்கள் மகாநாடுன்னு, நிறையப் பெண்கள் வருவார்களே, யாரார் எவ்வளவு நகைபோட்டுக்கொண்டிருக்காங்கன்னு, இப்பவே பார்த்து வைத்திருந்தா, வேணுமானு ஏற்படச்சே, பறிச்சிக்கொள்ளலாமல்லவா, அதறகாக வந்தார்,

இது என்ன, பொன்னி! உன்னோட கைங்கரியமா?

அப்படித்தான், நீ பேசுவே, இதை நான் சொல்லவில்லை, நம்ம ஏலக்கடை ஏகாம்பரம் பெண் இருக்காளே, அவதான், எனக்குச் சொன்னா.

அவளுக்கு எப்படித் தெரியுமாம்?

அவ, பேப்பர்லே, கட்டுரை, கதை எல்லாம் எழுதறாளே. அதனாலே அவளுக்கு இதெல்லாம் தெரிந்து இருக்கும்.

சரிதான், பெண்களும், பேப்பர் வேலைக்கு வந்தாச்சா......?

அதென்ன அப்படி ஆச்சரியப்படுறே. செங்கற்பட்டு ஜில்லா கலெக்டருக்கு அடுத்தபடியா இருக்கிறதே, ஒரு பொண்ணு தானும்—தெரியுமா உனக்கு.

எனக்கு, யார் பொன்னி! இதையெல்லாம் சொல்லிண்டிருக்கா. எப்பவாவது எனக்கே ஆசை உண்டாகி—வீட்டுக்காரரைக் கேட்பேன். பதில் சொல்வாரோ? அதுதான் கிடையாது.

வேண்டுமென்றே உன்னோட வீட்டுக்காரர் பேரிலே அபாண்டமா ஏதாவது சொல்லி வைப்பதுதான் உனக்கு வாடிக்கையாச்சே. அக்ரமக்காரி அல்லவா நீ!

போடி! பொன்னி! அக்ரமம்னு சொன்னதும் எனக்கு, அந்த அக்ரமத்தைப்பத்தின நினைப்பு வந்துது.

என்ன அக்ரமத்தைச் சொல்லப் போறே.

அதாண்டி, நம்ம வத்சலாவோட விஷயம். மூணு நாளைக்கு முன்னாலே, பாவம், அவமனம் படாத பாடு படுமே, நாமாவது போய் அவளுக்கு ஆறுதலா நாலு வார்த்தை சொல்லிவிட்டு வருவோம்னு போனேன். வத்சலா எப்பவுமே கொஞ்சம் வாய் துடுக்குக்காரி; நம்மோடு பழகுவாளே தவிர, மனம்விட்டுப் பேசமாட்டா.

கிடக்கட்டும் உன்னோட வர்ணனை, விஷயத்தைச் சொல்லு.

அவளுக்கு மனச்சாந்தி ஏற்படட்டும்னு நான் போயி பேசிக்கொண்டிருந்தா, பொன்னி! அவ சள்ளு சள்ளுன்னு பேசி, என் மனசையே புண்படச் செய்துவிட்டா.

நீ என்ன சொன்னயோ, வத்சலாவுக்குக் கோபம் வருகிற மாதிரி.

அவளைப்போலத்தானே, நீயும். அவளைக் கோபப்படுத்தவா, நான் அவ வீடுதேடிப்போவேன்.

வேண்டுமென்றே செய்யாவிட்டாலும், உன்னையும் அறியாமல் ஏதாவது, பேசிவிட்டிருப்பே.

ஆமாண்டியம்மா, எனக்கு வயது எட்டு, பேசத்தெரியாது, போயேன்.

வயசுக்கும் பேச்சுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு! வயசு வளர வளரப் பேசுவதிலே சாமர்த்தியம் வளருமா, என்ன! பேசுகிற சக்தி வயசு ஆக ஆகக் குறையும்.

பொன்னி! யாரோ, விஸ்வேஸ்வரய்யாவாம், நூறு வயசாமே அவருக்கு, இப்ப.

ஆமாம், இப்போதும், நல்லபடி தானே இருக்கிறார், பெரிய நிபுணர், விஸ்வேஸ்வரய்யா—மைசூர் சமஸ்தானம்.

மைசூரிலே, தசரா. எவ்வளவோ பேர் போறா. யார் இருக்கா, நம்மை அழைச்சிண்டுபோக. அவரைக் கேட்டா, உன் தம்பியை அழைச்சிண்டு போகச்சொல்லுன்னு சொல்லிவிடுகிறார். அவனைக்கேட்டாலே, ஆகட்டும் பார்க்கலாம், ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்லிவிடுகிறான்.

காமராஜர் 'டைப்'போல இருக்கு உங்க தம்பி, யார், எதைக்கேட்டாலும், ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்லிவிடுவது.

அப்படிச் சொல்லிவைத்தா எல்லோருக்கும் ஒருவிதமான திருப்தி ஏற்படும்னு, காமராஜர் அப்படி ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்கிறார் போலிருக்குது.

வேறேவிதமாக அல்லவா இப்ப, சொல்கிறார்கள். ஒரு காரியத்தையும் காமராஜர் செய்துமுடிக்கமாட்டார், சும்மா ஆகட்டும்ஆகட்டும்னு சொல்லிக் காலத்தைக்கடத்துவார். அதுதான் அவருடைய வித்தைன்னு எல்லோருமே பேச ஆரம்பிச்சாச்சே. எல்லோரையும் திருப்திப்படுத்தணும்னு நினைச்சி, காமராஜர், 'ஆகட்டும் பார்க்கலாம்' என்கிற மந்திரத்தை உச்சரிக்க ஆரம்பிச்சி, இப்ப, அவர் பேச்சை

உப்புச்சப்பு இல்லாததுன்னு, எல்லோருமே சொல்லிவிட்டாளே...

அதுவும் அப்படியாயிப்போச்சா? பொன்னி! ஒரு நாட்டை ஆளும் முதல் மந்திரிக்கு இதுகூடவா புரியாது.

எப்படிப் புரியும்! இது நாட்டை ஆளுவதாலே புரிகிற விஷயமல்லவே; வீட்டை ஆள்பவர்களுக்குத்தான புரியும்.

போதும் பொன்னி, புதிர்போடுவது. விளக்கமாகச் சொல்லு.

காமராஜர், இப்போது, யார் எதைக்கேட்டாலும், ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்லித் தப்பித்துக்கொள்கிறாரே; அவர் மற்றவர்களைப்போலக் கலியாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தினால், வீட்டுக்காரி கேட்பதற்கெல்லாம், ஆகட்டும் பார்க்கலாம், ஆகட்டும் பார்க்கலாம என்று சொல்லிக் காலத்தை ஒட்டிக்கொண்டே இருக்கமுடியுமா! சும்மாவிடுவாளா!

அடி, அதைதச்சொல்கிறாயா? பொன்னி! நீலா போய்வந்ததிலே ஒரு புண்யமும் இல்லை—நீ போயிருக்கவேண்டும், மாதர் மகாநாட்டுக்கு, திருவனந்தபுரத்துக்கு.

நம்மை யார் கூப்பிடுவாங்க! போயிருந்தாலும் நம்ம வாயும் சும்மா இருக்காது; பெண்கள் உரிமைபற்றிப் பேசினது போதும், பழைய பஞ்சாங்கமாகவே நாம் இருந்து வருகிறோமே, துளிகூட உலகம் போகிற போக்குத் தெரியாமல். நியாயமா? இன்னமும் அரச மரம் ஆலமரம் சுற்றுகிறோம், பல்லி சகுனம் பூனை சகுனம்,பார்க்கிறோம். இராகுகாலம் என்றால் நடுநடுங்கிப் போகிறோம். நகைகள் மட்டும் புத்தம் புது தினுசுகளாக இருக்க வேண்டும் என்று கடை கடையாக அலைகிறோம். ஒரு பின்னல், இரண்டு ஆச்சி! ஒரு செண்டு மல்லியோ முல்லையோ வைப்பதற்குப் பதிலாகத், தலையைப் பூக்கூடையாகவே ஆக்கிக்கொண்டோம்! புருவத்துக்கு மை பூசுவதோடு இல்லை, உதட்டுக்குச் சாயம், நகங்களுக்குச் சாயம் பூசிக்கொள்கிறோம். இதைத்தான் கற்றுக்கொண்டோமேதவிர, புதிய அறிவுதுளி பெற்றிருக்கிறோமா? என்றெல்லாம் பேசிவிடுவேன்...,

அத்தோடு விடுவயோ நீ? பிராமண தூஷணையும் செய்யமாட்டேயோ?

பார்த்தயா, பார்த்தயா! உனக்கே சுரீல்னு கோபம் வருகிறது...

வரலாமோ......என்னமோ இரகசியம் பேசிக்கொண்டிருக்கிற நேரம்...நான் வந்துவிட்டேன்...

யாரு...? அட, நம்ம மனோன்மணி! வாடி, வாடி! பொன்னி! யார் தெரியுமா...என்னோடு, சின்ன வயதிலே படித்தவ......

வணக்கம்...வாங்க...உட்காருங்க......

மனோன்மணி! இவ பேர் பொன்னி! பெயர்தான அப்படி! பேச்சு இருக்கே, நெருப்புப் பொறியா இருக்கும்- துளிகூடக் கள்ளங் கபடமில்லாதவ... எனக்கு இவளை ஒரு நாள் பார்க்கா விட்டாக்கூடப்,பொழுதுபோகாது.

அப்படியா...நீ, எப்பவும், எதிலேயும் அதிர்ஷ்டக்காரிதான்......

என் அதிர்ஷ்டத்தை நீதாண்டி மனோன்மணி, மெச்சிக்கொள்ளணும். அது கிடக்கட்டும்; நீ எப்ப வந்தே?

கோபிக்கக் கூடாது; நான் வந்து நாலு நாள் ஆகப்போகுது.

நாலு நாள்! ஏண்டி இந்தப் பக்கத்திலே, நான் ஒருத்தி இருக்கறேன் என்கிற நினைப்பே வரவில்லையா உனக்கு. நெஞ்சழுத்தக் காரியாச்சே நீ, இல்லாமலா, டாக்டர் வேலைக்குப் போய்ச் சேர்ந்தே. பொன்னி! மனோன்மணி, டாக்டர் தெரியுமோ?

நல்லதுதானே அது. ஊருக்கு உபகாரமானது டாக்டர் வேலை.

உன்னைப் பெயரிட்டுக் கூப்பிடலாமோ...

தாராளமா...அதனாலே என்ன தவறு...

உன் பேர் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு......

பொன்னி என்கிற பேர் தானே! நம்ம நாட்டுக்கே, பொன்னு, தங்கம், முத்து, மரகதம்,மாணிக்கம்,கமலம், இப்படிப் பெயர் வைத்துக் கூப்பிட்டுக் கூப்பிட்டு அதிலே ஒரு ஆனந்தம் தேடிக்கொள்வது, பழைய நாளிலிருந்தே பழக்கமாச்சே...

கேட்டயோ, மனோன்மணி! இது தான் பொன்னியோட போக்கு! ஒரு கேள்வி கேட்டுவிட்டே, மளமளன்னு பேச ஆரம்பித்து விடுவா......

பேசுவதிலே, தப்புத் தவறு ஒன்றும் இல்லையே......எனக்குப் பொன்னியை ரொம்பப் பிடித்திருக்கு......

அப்படியானா, பொன்னியை,உன் கூடவே அழைத்துக்கொண்டு போய்விடேன் கல்கத்தாவுக்கு.

கல்கத்தாவிலா, இருக்கிறீங்க?

ஆமாம், பொன்னி! அங்குபோய் வருஷம் இரண்டு முடியப்போகுது.

மனோன்மணி கெட்டிக்காரி, தெரியுமா பொன்னி! என போயிருக்கா தெரியுமோ, கல்கத்தா......

போதுமே, உன் குறும்பு. எதை யாவது புரளி பண்ணி வைத்து விடாதே......

பொன்னிக்கே தெரியும், நான் புரளி பேசுவேனா, மாட்டேனா என்பது. ஏண்டி, வாயை மூடிடப் பார்க்கறே. எடு, கையை......... பொன்னி! மாப்பிள்ளை இருக்கற இடம் அது.........இவளே போய் விட்டா அங்கே, எப்போது கலியாணம்னு கேட்க......

எவளாவது கேட்பாளா அப்படி, நீயே சொல்லு, பொன்னி.

கேட்கறதுன்னா, பேச்சாலேன்னு அர்த்தம். கண்தான் இருக்கே, ஆயிரம் கதை பேச.

உன்னோட கண்மட்டும் என்னவாம், இலேசானதா......? நீ, இவ பேசுவதைப்பத்திக் கவலைப்படாதே ......மனோன்மணி! கல்கத்தாவிலேயும், பக்கத்து இடங்களிலேயும், கலகம்னு பேப்பர்லே போட்டிருக்குதே, உண்மைதானா?

பேப்பர்லே வந்திருப்பது கொஞ்சம்தான்......நடந்தது எல்லோரையும் நடுநடுங்க வைத்துவிட்டது, போயேன். ஒரே கலகம், கத்திக் குத்து கலவரம்.........தெருவிலே நடக்கவே, எங்களுக்கெல்லாம், திகில்தான், பத்துப் பதினைந்து நாளா......

மணி! இவ இருக்காளே, பொன்னி, இங்கே இருந்தபடியே இந்த ஈரேழு பதினாலு லோகத்தையும் ஒரு சுத்துச் சுத்திவிடுவா.

ஊர் விஷயம் உலக விஷயம் தெரிந்திருக்கிறது, தேவைதானே.

அது சரி, போ! தெரிந்து? ஏதாவது தேசத்தைப் போய், இவ ஆளப்போறாளாக்கும்.

ஏன் ஆளப்படாதுன்னு கேளேன், மணி!

சிலோனிலே இப்ப யார் அரசாள்வது தெரியுமோ...?

தெரியும்டிம்மா, தெரியும் பொண்ணுதான்! ஆனா, என்ன

நடக்குது தெரியுமோ? அந்நிய நாட்டுக்காரர்களுக்கெல்லாம், அதிகமான வரிபோட்டு, அநியாயம் செய்கிருளாம்......

நியாய அநியாயம் இடக்கட்டும் ...அவரவர்கள் அவரவர்கள் நாட்டை அவர்கள் இஷ்டப்படி, கட்டிக் காப்பாற்றத்தானே வேண்டும். அந்த உரிமையைப் பழித்துப் பேச நமக்கு என்ன உரிமை இருக்கு...

பலே! பலே! சரியான சமயத்திலேதான், நான் வந்து சேர்ந்தேன்...நான்தான்...பட்டு...

பட்டுத்தானே! அதானே, வருறபோதே பட்டாசுக்கட்டுக் கொளுத்திவிட்டதுபோலச் சத்தம் வருது......என்டி, அப்படிப் பார்க்கறே...அது மனோன்மணி! இருப்பிடம் கல்கத்தா! தொழில்; அறுக்கறதும் தைக்கறதும்...

டாக்டர் என்கிறதை, அவ்வளவு நாகரீகமாச் சொல்கிருங்க...

கல்கத்தாவிலே, சர்க்கார் ஆஸ்பிடலிலேயா...?

இல்லே, இல்லே...தனியாகவே, சிறிய அளவிலே, வைத்தியசாலே...

மனோன்மணி, பட்டு, வக்கீலுக்குப் படிக்கிரு...வாயே, அறுதல் இவளுக்கு. வக்கிலாகவும் ஆகிவிட்டா, தீர்ந்தது...

பேசட்டும், பேசட்டும்...வாக்குமூலம் அவ்வளவையும் வாங்கிக் கொண்டுதானே, குறுக்கு விசாரணை செய்யணும், நீ பேசாமலிரு பொன்னி!

பட்டு, உன்னோட படபடப்பைக் கோர்ட்டோடு நிறுத்திக்கொள்ளணும் தெரியுதா...என்னிடம் காட்டினே, வரப்போருன்பாரு, மாப்பிள்ளே, அவனேவிட்டு, வாலேஒட்ட நறுக்கச்சொல்லிவிடுவேன்,தெரிஞ்சிக்க......

அய்யே...! நீயும் சொல்லுவே, அவரும் செய்வார்...நானும் சும்மா இருப்பேன்...இது எனன, கர்நாடக காலமா...சட்டம் இருக்குது; மீறி நடந்தா, மனுநீதிமன்னனுலும், மாட்டிக்கொண்டு கம்பி எண்ண வேண்டியதுதான்...... அதைத் தெரிந்துக்கொள்ளணும் ......உனக்கெங்கே புரியப்போகுது இதெல்லாம். அப்பளம், வடாம் தயாரிக்கச்சொன்னு, கூடைகூடையாத் தயாரித்துக் கொடுப்பே...

உன் கண் பட்டுத்தானே என்னமோ, அப்பளத்துக்கும் ஆபத்து வந்திருக்கு......

அப்பளத்துக்கு என்ன ஆபத்து? கல்கத்தாவுக்குக்கூட அனுப்புகிருர்களே; இங்கிருந்து,

இந்த அநியாயத்தைக் கேள்டி, மணி! அப்பளத்துக்குக் கூடவா, வரி போடணும் இந்த சர்க்கார்லே, விற்பனே வரி...அதுவும் அதிகமான வரி......

அப்பள வரி அடியோடு ஒழிகன்னு, ஊர்வலம் நடத்திப் பார்க்கறதுதானே!

பட்டு! உனக்கு கேலியாத்தான் இருக்கும். ஊர்வலம் என்ன, மகாநாடே நடந்திருக்குது......

அப்பளத்துக்காகவா ஒரு மகாநாடு......?

அப்பள வரியை ஒழித்துக்கட்டத்தான், மகாநாடு, சட்டசபையிலே கூடப் பேசினுளே......

எதைப்பத்தி? அப்பளம், வடாம், இதைப்பத்தி எல்லாமா......

ஆமாம்...வேறே என்ன இருக்கு பேச! அணுசக்தி, விஞ்ஞானம் இதை எல்லாம் டில்லியிலே பேசி முடிவு செய்துவிடுகிறுங்களே! நம்ம சர்க்கார், அப்பளம் வடாம் பற்றியாவது பேசவேண்டியதுதானே......

பாரேண்டி, பொன்னியோட வாய்க் கொழுப்பை......

உள்ளதைச் சொன்னு, வாய்க் கொழுப்புன்னு சொல்றதா! கல்கத்தாவிலே, காங்கிரஸ் தலைவர்களேகூட இப்ப, டில்லியோட போக்கைப் பலமாக் கண்டித்துத்தான் பேசிண்டிருக்கா......

சரிதான! நீயும, பொன்னியோடு சேர்ந்துகொண்டயோ...அவ்வளவுதான். இனி அவளேக் கையிலே பிடிக்கவே முடியாது.

மத்திய சர்க்காரை எதிர்த்து ஒரு மாகாண சர்க்கார் பேசலாமோ; கண்டிக்கலாமோ—சட்டம் இடம் கொடுக்காதே......

பட்டு, சட்டம பேசரு, வக்கில் படிப்பல்லவா?

பட்டு! வங்காளத்து முதல் மந்திரி இருக்கிருரே டாக்டர் ராய், மிக மிகத் தைரியசாலி. யாருக்கும் பயப்படமாட்டார். அவர், அடிக்கடி டில்லி போக்கைக் கண்டித்துத்தான பேசருர்.

சட்டப்படி தப்பாயிற்றே. எப்படி, அவா பெரிய சர்க்காரைக் குறை கூறலாம்?

போய்க் கேளேன், அவரை! நீ, படித்த சட்டத்தைத தூக்கி உன் முகத்திலேயே எறிந்து, போ! போ! மக்களுக்காகச் சட்டமே தவிர, சட்டத்துக்காக மக்கள் இல்லே! என்று சொல்லி அனுப்பிவிடுவார்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. சட்டப்படிதான் யாரும், நடந்தாகவேண்டும். நானுவதி விஷயமா கவர்னர் போட்ட உத்தரவே சட்டப்படி சரி இல்லேன்னு கோர்ட் சொல்லி இருக்கே......

கவர்னர் செய்கிற காரியத்துக்குக்கூடவா தடை......

கவர்னர் என்ன, சட்டப்படி இல்லேயானு, கடவுள் பேரிலேகூட 'கேஸ்! போடலாம்னு பட்டு சொல்லுவா......

போடலாம், ஆனுல் சம்மன் எப்படி, எங்கே யாரிடம் கொடுத்து அனுப்பறதுஎன்பதுதான் முக்கியமான பாயின்ட்!

அம்மோய்! பெரியய்யா வந்திருக்காரு, கையோடு கூப்பிட்டுக் கொண்டு வரச்சொன்னுரு...

போடியம்மா பொன்னி, நாங்களும் போருேம்; பிறகு பார்க்கலாம்...

சம்மன் வந்தாச்சின்னு,பொன்னி கட்டாயம் போயாகணும்.

உன்னோட விளேயாட்டுத்தனம் இருக்கே பட்டு, கலியாணம் ஆகிற வரைக்கும்தான்... பாரேன்...

கலியாணம் ஆவதற்கும் சுபாவம் மாறுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கு?

அடியோடு இல்லேன்னு சொல்லிவிட முடியாது. வைத்திய சாஸ்திரத்திலேயே, ஆதாரம் இருக்கு...

வெளியே போகணுமாம் ஐயா, கூப்பிட்டுகிட்டு வரச்சொல்ருரம்மா ...

சரி, சரி, பட்டு, மணி, இளம்புங்க எல்லாம் பொன்னி போய் அவ காரியத்தைக் கவனிக்கட்டும்......

ஆமாம், வாரண்ட் பிறந்தாச்சி... ...இதுக்கும் போகலேன்னு, பொன்னியோட வீட்டுக்காரரே வந்து அரெஸ்டு செய்து இழுத்துண்டு போவார்......

ஏதேது, பட்டு, கோர்ட்டுக்குப் போய்க் குட்டுப்படுகிற வரையிலே, வக்கீல் பாஷை பேசிப்பேசி, நம்மை உயிரை வாங்குவாபோல இருக்குதே......

இதுக்குப் பதில், அடுத்த வெள்ளிக்கிழமை......இப்ப கோர்ட் கலேகிறது...... ★

# எங்கள் கருத்து எண்ணிக்கையில் குறைந்தது!

8-ம் பக்கத் தொடர்ச்சி

மீடியம் இன்டஸ்ரீஸ்''க்குத் தரப்பட்டிருக்கிறதுஎன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில்தான் நமது நிதியமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை இதோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். தனியார் துறையை வளர்ப்பதில் என்ன கேடு வந்து விடும்? தனியார் துறை வளர்ந்தாலும், தொழிலும் தானாகவே வளர்கிறதே என்ற அவர்களது வாதம் மற்றொரு வாதத்தால் அடிபட்டுப்போயிருக்கிறது. தனியார் துறைவளர்வதால், அதில்கிடைக்கிற இலாபம் பதுங்கி விடுகிறது, என்று அவர்களே இந்த மன்றத்தில் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். பதுங்கிவிட்டது என்பது மட்டுமல்ல, அது கள்ளத்தனமாக வைக்கப் பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள்.

The Hon. Sri. C. Subramaniam:- If I am asked to choose as between no industry and private industry, I say private industry. But if it is a question of private industry vs. public industry, certainly I will prefer public industry.

என் வாதம், இராஜாஜி வாதத்தில் என்னைக் கொண்டுபோய்விடவில்லை. நாம் தொழில்கள் அமைக்கவேண்டும், நாம் முன்னேறவேண்டும், தனியார் துறையில் அக்கரை செலுத்தியிருந்தும், முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் தனியார் துறையில் கிடைத்த இலாபம் பொதுக்காரியத்திற்கு வரவில்லை என்று தெரிந்திருந்தும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1050 கோடி ரூபா தனியார் துறைக்கு அதிகப்படுத்தியிருப்பது உண்மையிலேயே நல்லது தானா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். வளர்ந்திருக்கிற தேசிய வருமானம் எங்குபோயிருக்கிறது என்று கண்டுபிடிக்க ஒரு குழு அமைக்கவேண்டுமென்று நேரு அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அப்படி ஒரு குழு அமைக்கப்படும். 500 மெம்பர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் ஒரு குழு அமைக்கவேண்டுமென்றால், அதில் தகுந்த நிபுணர்கள் கிடைக்காமல் போய்விடமாட்டார்கள். அவர்கள் எதைக் கண்டுபிடிப்பார்கள்? இவ்வளவு பணம் கள்ளத்தனமாக வைக்கப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடிப்பார்களானால், இவ்வளவு பணம் கள்ளத்தனமாகச் செல்வதற்கு எந்தெந்த அதிகாரிகள் உடந்தையாக இருந்தார்கள், எந்தெந்த அதிகாரிகளின் திறமைக்குறைவால் இவ்வளவு பணம் கள்ள மார்க்கட்டில் வந்தது என்று பார்த்து, அந்த அதிகாரிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். அவர்களில் எத்தனை பேர், முந்திரா போன்றவர்களுக்கு வேண்டியவர்கள் இருக்கிறார்கள் என்று கண்டுபிடித்து அறியலாமே தவிர, பணம் திரும்ப வந்துவிடும் என்று குழு அமைக்கவில்லை. எதிர்க்கட்சிகள இதுபற்றிப் பேசுகிறபோது, "பயப்படாதீர்கள், பயப்படாதீர்கள் நாங்கள் ஒரு குழு அமைக்கப்போகிறோம். பணம் எங்கு போய் இருக்கிறது என்று கண்டுபிடிக்கலாம்'' என்று சொல்வதற்கு இந்தக் குழு பயன்படுமே தவிர, மறைந்தது மறைந்ததுதான். நிதியமைச்சர் அவர்கள் கோவை வாசி என்பதால், அவர்கள், கள்ளத்தனமாகச் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பணம் சீமான்களாலும், கோமான்களாலும் எப்படி எந்தெந்தத் தவறான காரியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது என்று நெருங்கியிருந்தல்ல, தொலைவில் இருந்து கொண்டு, சந்தோஷத்தோடு அல்ல, அருவருப்போடு கவனித்துப் பார்த்திருப்பார்கள்.

அப்படிப் போய்விட்ட பணத்தை எப்படித் திரும்பப் பெறப்போகிறோம்? அப்படி முதல் இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களில் பாழாய்ப்போன பணம்திரும்ப வராது என்று தெரிந்திருந்தும், மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஏன் தனியார் துறைக்குத் தொடர்ந்து அதிக தொகை ஒதுக்குகிறீர்கள்? மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் தனியார் துறையைக்கொழுக்கவைத்துப், பின்னர் அதிலும் பாழாகிப் போன பணத்தை மறுமுறையும் கண்டுபிடிக்க வழிவகைகள் காணக் குழுக்கள் அமைக்கப்போகிறோம். இச்சந்தர்ப்பத்தில் நிதியமைச்சர் அவர்களுக்கு ஒரு விகடத் துணுக்கு வெளிவந்ததைக்கூற விருப்புகிறேன். ஒரு ஓவியன் ஒரு படத்தைத் தீட்டினானும், ஒரு பசுவும், புல்லும் இருப்பதாக. ஆனால் அதில் பசுவும் காணப்படவில்லை. புல்லும் காணப்படவில்லை. புல் எங்கே என்று கேட்டதற்கு அதைப் பசு தின்று விட்டது என்று கூறினானும். பின், பசு எங்கே என்று கேட்டதற்கு, பசு புல்லைத் தின்றுவிட்டுப் போய்விட்டது என்றானும், அதேபோல், உயர்ந்திருக்கிறதாகக் கூறப்படும் தேசிய வருமானம் எங்கே என்று கேட்டால், பாருங்கள் பதினாயிரம் கோடிக்குத் திட்டம் தீட்டியிருக்கிறோம் என்று சொல்லி, இவ்வளவு வருமானம் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். சரி, அந்தப் பணம் எங்கேபோய்விட்டது என்று கேட்டால் அதைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆக, நம் தேசிய வருமானம் ஒரு சிலரிடம் சிக்கிவிட்டதற்கு நீங்கள் உடந்தையாக இருந்தீர்கள்என்றுநான் குற்றஞ்சாட்டக்கூடத் தயங்கமாட்டேன். அப்படிப்பட்ட முதலாளிகள், இங்குள்ளவர்களைப்பற்றி நேரில் எனக்குத் தெரியாது. அகில இந்தியரீதியில் எடுத்துக்கொண்டால், அப்படிப்பட்ட முதலாளிகள் தான் இன்றைய தினம் ஆட்சி நடத்துகிற கட்சிக்கு இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பணத்தைத் தேர்தல் நிதிக்கு அள்ளித் தருகிறார்கள். அதை வெட்கமில்லாமல் ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். அதை நாங்கள் தடுக்கமாட்டோம் என்று பாராளுமன்றத்திலும் சொல்லியிருக்கிறார்கள். வெண்ணெயை வழித்தவன் கையைச் சுவைக்காமல் இருக்க மாட்டான், என்ற கொச்சை மொழி போல், முதலாளிகளிடம் தேர்தலுக்குப் பணம் வாங்கிய காரணத்தினால், மேலும் மேலும் நீங்கள் தனியார் துறையைத் தட்டிக் கொடுக்கிறீர்கள் என்ற பலமான குற்றச்சாட்டை எங்கள் கட்சி கூறுகிறது. எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் எண்ணத்தில் அது வலிவு பெற்றது என்பதால். புரபஸர் கால்டார் என்ன சொல்கிறார்கள் என்று பாருங்கள், இன்றைய தினம் மறைத்து வைக்கப்பட்டுக்கொடுபடாமல் இருக்கிற வருமான வரி

# வாக்குறுதி நிறைவேற்றப்படவேண்டும்

எவ்வளவு என்றால், 300, 400 கோடி இருக்கலாம் என்கிறார்கள். 50 அல்லது 100 கோடிதான் இருக்கலாம் என்கிறார்கள், சிலர். சிலர் 30, 50 கோடிதான் இருக்கும் என்று வாதித்தார்கள். இதை எப்படி எந்த முறையில் எடுக்கலாம் என்று பேசிக்கொண்டிருக்கிறார்களே தவிர, புதைந்த பொருள் எப்படிக் கிடைக்கும். திருநீலகண்ட நாயனாரே மறைவாகப் புதைத்துவைத்த ஓட்டைக் காணாமல் பரிதவித்தார் என்று சொன்னால், மறைத்துவைத்திருப்பதை நம் நாட்டு இந்த நாயன்மார்கள் எப்படிக் கண்டுபிடிக்கப் போகிறார்கள்? இப்பொழுதும் தனியார் துறைக்கு அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள்—அதே நேரத்தில் நாங்கள் சோஷியலிஸத்தைக் கைவிடவில்லை, நாங்கள் பொதுத்துறையைத்தான் வளர்க்கப் போகிறோம் என்று மக்கள் எண்ணத்தக்க வகையில்,

> "The growth of public „sector in various fields such as power, transport and heavy industries places, the State in a better position to ensure the broad direction of economic activity from the aspect of public interest."

என்று போடப்பட்டிருக்கிறது. போக்குவரத்துத் துறை, மின்சாரம், பவர் இப்படிப்பட்டவைகள் எல்லாம் பொதுத்துறையில் இருப்பதால், மாநில அரசுகளுக்கு மகத்தான சக்தி கிடைத்துவிடுமென்று நம் பிக்கை தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. மின்சாரம் சர்க்கார் துறையிலும் இருக்கிறது, பொதுத்துறையிலும் இருக்கிறது. போக்குவரத்துப் பற்றிச் சர்க்கார் என்ன சொல்கிறார்கள்? போக்குவரத்துத் துறையைத் தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்கிற நேரத்தில் எல்லாம், போயும் போயும் உனக்கு இதுதான் கிடைத்ததா என்று கேட்பதும், இவை நம்மிடத்தில்தானே இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த மன்றத்தில் ஒருவர் சொன்னார், பஸ் முதலாளிகள், ஆஸ்ட்ரேலியாக்காரர்களோ அல்லது அமெரிக்கர்களோ அல்ல, இந்த நாட்டுக்காரர்கள்தானே! அவர்கள் பணம் சம்பாதித்தால் என்ன? அதனால் என்ன கெடுதல் வந்துவிடும் என்று சொன்னார்கள். நம் நாட்டில் திருடுகிறவன்கூட இந்த நாட்டுக்காரன்தான், அவன் திருடிய பொருளை இந்த நாட்டிலேதான் செலவழிக்கிறான். ஆனால் திருட்டு என்றால் அது எப்படிப்பட்ட குற்றமோ அதேபோலத்தான், "accumulation of wealth is immoral" என்று மிகக் கடுமையான பதத்தை நேரு அவர்களே இரண்டு தினங்களுக்கு முன்னால் உபயோகப்படுத்தியிருக்கிறார்.

> 'Accumlation of wealth after a particular stage is unpatristic and anti-national'

என்று சொல்லக்கூடிய அளவிற்குக் கருத்து வளர்ந்திருக்கிறபோது, நீங்கள் இந்த டிரான்ஸ்போர்ட் விஷயத்தில் என்ன கொள்கையைக் காட்டியிருக்கிறீர்கள்? படிப்படியாக இந்தப் போக்குவரத்துத்துறையைப் பொதுத்துறைக்கு மாற்றப்போகிறோம் என்று சொல்லுவார்கள். இவ்விதம் 13-வது பக்கத்தில் சொல்லிவிட்டு, அடுத்தாற்போல் 248-வது பக்கத்தில்.........

> . Road Transport programmes will be mainly in the private sector, but a provision of Rs. 18 crores is proposed for expansion of the nationalised road transport services.

இந்தியத் துணைக்கண்டம் பூராவுக்குமாக 18 கோடி ரூபாயை இந்தப் போக்குவரத்துச் சாதனங்களைத் தேசியமயமாக்குவதற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இதைச் சொல்லிவிட்டுப் பின்னும் சொல்லுகிறார்கள்..

> It is expected that about 5000 vehicles will be added to the fleet of nationalised undertakings during the period of the plan.

இப்படி இருக்கும்போது, எங்கேயிருந்து சோஷியலிச பாணியை, சமதர்ம சமுதாயத்தை நிறைவேற்ற இருக்கிறீர்கள்? எப்படி நிறைவேற்ற முடியும்? என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகையினால் இதைப்பற்றி இரண்டாவது குற்றச்சாட்டாகச் சொல்லுவது, நீங்கள் சமதர்மக் கொள்கையை விட்டு மெள்ள மெள்ள நழுவிக்கொண்டே இருக்கிறீர்கள். அது ஒரு வேளை சுதந்திரக் கட்சியின் வளர்ச்சியினால் ஏற்பட்ட எண்ணமோ என்னவோ தெரியவில்லை; அல்லது சுதந்திரக் கட்சி கம்யூனிஸ்டுகளுக்கும் காங்கிரஸ்காரர்களுக்கும் இப்போது வித்தியாசமே தெரியாத அளவுக்குக் காங்கிரஸ்காரர்கள் மாறிவிட்டார்கள் என்று சொல்லுவதை எண்ணிக்கொண்டு, நம்மை எங்கே கம்யூனிஸ்டுகள் என்று கருதிவிடப் போகிறார்களோ என்ற எண்ணத்தில்தான் இவ்வாறு பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. உண்மையிலேயே இவர்கள் சமதர்மத் திட்டத்தைப், பொது உடைமை திட்டத்தை நோக்கிப் போகிறார்கள் என்றால், உண்மையிலேயே மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டும். அவர்களுக்குக் கொடுத்திருக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல், அவர்களுக்குத் துரோகம் செய்யக்கூடிய முறையில் தனியார் துறையை அதிகப்படுத்துகிறார்கள் என்றால், கள்ளத்தனமாக நாட்டுமக்களிடமிருந்து பணத்தைப் பதுக்குகின்றவர்களுக்கு மறைமுகமாகவும் நேர்முகமாகவும் ஆக்கம் கொடுக்கின்றீர்கள் என்கின்ற குற்றச்சாட்டை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நான் எடுத்துச்சொல்ல விரும்புவது, நல்ல மறுமலர்ச்சி எண்ணத்துறையில் ஏற்பட்டிருக்கிறது என்பதுதான். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தப் பகுதிக்குப் போதிய அளவுக்குப் பணம் ஒதுக்கப்படவில்லை என்று சொன்னபோது, இந்தப் பகுதி அந்தப் பகுதி என்று பிரித்துப் பேசுவானேன், அவ்விதம்

# மறுமலர்ச்சி எண்ணத்தில்தான் — ஏற்பாட்டில் அல்ல!

பேசுவது பாரதத்திற்கு விரோதம், அவ்விதம் பேசுவது தேசியத்திற்கு விரோதம், இவ்விதம் பேசுவதை நாம் எப்படிச் சகித்துக்கொள்ள முடியும் என்று பேசினவர்களை எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒன்றுதானே என்று பேசியவர்கள் எல்லாம், சிறிய குழந்தை போன்று இருக்கின்ற எங்கள் நீலகிரி மாவட்டத்திற்கு அதிகமாகச் செலவு செய்யுங்கள், என்று ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மாவட்டத்திற்காக வாதாடுவது தேசியத்திற்கு விரோதமல்ல என்று இன்று எடுத்துச் சொல்கிறார்கள். அந்த முறையில்தான் நமது நிதி அமைச்சர் ரீஜினல் டிஸ்பாரிட்டி என்ற அளவில் நமது மாநிலத்துக்குப் பங்கு கேட்கிறார். அப்படிக் கேட்கும் தன்மையையும் பார்த்து, அப்பேற்பட்ட ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டிருப்பதைப் பார்த்து, நாட்டிலே நல்ல முறையில் ஒரு மறுமலர்ச்சி எண்ணத்துறையில் ஏற்பட்டிருப்பதைப்பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் சொல்லுவதிலுள்ள வார்த்தைகளை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன், இவ்வாறான மறுமலர்ச்சி இன்றைக்கு 'எண்ணத்துறையில்' ஏற்பட்டிருக்கிறது, ஏற்பாடுத் துறையில் அல்ல. பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற விவாதங்களைப் பார்க்கும்போது, நமது தென்னகத்தில் இருந்து போயிருக்கின்ற உறுப்பினர்கள், அவர்கள் காங்கிரஸ் கட்சிக்காரர்களாயிருந்தாலும் சரி, எங்கள் கழகத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, கம்யூனிஸ்டுகளாயிருந்தாலும் சரி, பிரஜா சோஷியலிஸ்டுக் கட்சியினராய் இருந்தாலும் சரி, மத்திய சர்க்காரைத் தட்டிக்கேட்கிறார்கள், அதட்டிக் கேட்கிறார்கள், எங்கள் தென்னகத்திற்கு என்ன செய்யப்போகிறீர்கள், தென்னகம் வஞ்சிக்கப்படுகிறது, இன்னும் அதை அங்குள்ள மக்கள் தாங்கிக் கொண்டிருக்க மாட்டார்கள். இரயில்வேயை எடுத்துக் கொண்டால், எல்லாம் வடக்கேதானா? உர உற்பத்திச் சாலைகளை எடுத்துக்கொண்டால் அவைகள் எல்லாம் வடக்கேதானா? உருக்குத் தொழிற்சாலையை எடுத்துக் கொண்டால், ஒன்றுக்கு நான்கு வடக்கேதானா? என்று தட்டிக்கேட்கிறார்கள், தூத்துக்குடித் துறைமுகம் ஏன் கவனிக்கப்படவில்லை? மங்களூர்த் துறைமுகம் ஏன் கவனிக்கப்படவில்லை? என்று கேட்பதை நாம் இன்று பார்க்கின்றோம். தென்னகத்திலுள்ள துறைமுகங்கள் எல்லாம் கவனிக்கப்படவில்லை, அதே நேரத்தில் அங்கே கண்டலாபோன்ற துறைமுகங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படுகிறதே! எங்கள் இடம் வஞ்சிக்கப்படுகிறதே; ஏன்? என்றெல்லாம் கேட்கிறார்கள். இவ்விதம் கேட்பது எங்கள் கழகத் தோழர்கள் மட்டும் அல்ல, காங்கிரஸ் கட்சித் தோழர்கள் கேட்கிறார்கள். ஒருவருக்கொருவர் போட்டிபோட்டுக்கொண்டு பாராளுமன்றத்தில் வாதாடுவதை நாம் பார்க்கின்றோம். இதைப் பார்த்துக்கூட நான் ஆச்சரியப்படவில்லை, பாராளுமன்றத்தில் இருக்கின்ற வடக்கேயுள்ள உறுப்பினர்களும் இதை எதிர்க்காமல் இருக்கிறார்கள். ஏன் எதிர்க்காமல் இருக்கிறார்கள் என்றால், நம்முடைய நியாயமான கோரிக்கையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள், அவர்கள் மட்டுமல்ல, நேரு பண்டிதரே உணர்ந்திருக்கிறார் என்பதை நான் அறிவேன், நீங்கள் உணர்ந்துகொள்ள மாட்டீர்கள் என்பதையும் நான் அறிவேன். அவ்விதம் உணர்ந்தால் எங்கே உங்களது நெஞ்சத்தில் பலஹீனம் ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சுகிறீர்கள். அந்த உணர்வு உங்களுக்கு ஏற்படாமல் இருப்பது உங்களைப் பொறுத்தவரை நல்லதுதான்.

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை, அங்குள்ளவர்கள் இதை நன்றாக உணர்ந்திருப்பதினால்தான், எங்கள் கழகத் தோழர் சம்பத் அவர்கள் பேசினாலும் சரி, அல்லது கோவைமாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் இராமசாமி அவர்கள் பேசினாலும் சரி, கேரளநாட்டைச் சேர்ந்த தாணுப்பிள்ளை பேசினாலும் சரி, ஆந்திராவைச் சேர்ந்த வேதகுமாரியாக இருந்தாலும்சரி, (குறுக்கீடு) தாணுப்பிள்ளை என்று சொல்லுவது மலையாளப்பெயர் போன்று இருந்தது, அதனால்தான் குறிப்பிட்டேன், இவ்விதம் யாராக இருந்தாலும் தென்னகத்திலுள்ள உறுப்பினர்கள் இப்போது தட்டிக் கேட்கிறார்கள். இவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று வடவர் கவனத்தோடு கேட்கிறார்கள். இவ்விதம் தங்கள் நாட்டுக்காகத், தங்கள் இடத்திற்காகப் பேசுவது தேசியத்திற்கு விரோதம் அல்ல என்று பண்டித நேருவே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்னின்ன திட்டங்களை நிறைவேற்றியாக வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், பார்த்துச் செய்யலாம், பக்குவம் இருந்தால் செய்யலாம் என்று சொல்லுகின்ற பெருந்தன்மையில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் பண்டித நேருவைச் சூழ்ந்திருக்கின்றவர்கள் இந்த நம்பிக்கையைத் தவறான காரியத்திற்குப் பயன்படுத்துகிறார்கள். நமது அமைச்சர் தம் நண்பர்களை தம் அறைக்கு நம்பிக்கையுடன் அழைத்திருக்கலாம். அவ்விதம் அழைத்திருக்கும்போது, அவர் உள்ளே குளிப்பதற்கு சென்றிருக்கும்போது, அவரது மேஜையிலுள்ள டிராயரை இழுத்து, அதில் எழுதிவைத்திருக்கின்ற ஆர்டரைப் படிக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள், இவ்விதம் நடந்ததாகச் சொல்லுகிறேன் என்று யாரும் கருதவேண்டாம். அப்படி நடந்துவிட்டால், என்னநிலை ஏற்படும்? அதுபோலப் பண்டித நேருவைச் சூழ்ந்திருக்கின்றவர்கள் அவருடைய நம்பிக்கையை, அவருடைய பெருந்தன்மையைத் தவறான காரியத்துக்குப் பயன்படுத்துகிறார்கள்.

நாம் திட்டவட்டமாக அவர்களிடம் கேட்க வேண்டியது, மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு என்னென்ன திட்டங்களைத் திட்டவட்டமாக நிறைவேற்றப்போகிறீர்கள். சேதுசமுத்திரத் திட்டம், தூத்துக்குடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தல் ஆகிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப்போகிறீர்களா இல்லையா என்று திட்டவட்டமாக கேட்கவேண்டும். இந்த நேரத்தில் நான் அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், உங்களுடைய திறமையைப் பற்றி நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. இதில் நீங்கள் வெற்றி பெறுவதிலிருந்துதான், இனிமேல் உங்களுடைய திறமையைப்பற்றி நாட்டுமக்கள் தீர்மானிக்கவேண்டும், உங்க

# தட்டுங்கள்—திறக்கப்படும்

ளுடைய நாணய சுத்தியைப் பரிசோதிப்பது இதில்தான் இருக்கிறது. திருப்பித் திருப்பித் தூத்துக்குடித் துறைமுகத்தை ஆழப்படுற்த வேண்டும் என்று நாங்கள் சொல்லுவதும், அதற்கு நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் பார்க்கலாம் என்று பதில் அளிப்பதும் வெறும் பத்திரிகையில்தான் இருக்கிறதே தவிர, வேறு எந்தவிதமான பலனையும் காணவில்லை. தூத்துக்குடித்துறைமுகத்தைஆழப்படுத்தவேண்டிய திட்டம் இன்னும் விவாதத்திற்கு இடமாகவே இருக்கிறது. இதைப்பற்றி விசாரித்து ரிப்போர்ட் கொடுப்பதற்காக இந்திய சர்க்கார் நமது இராஜ்யத்தின் தலைசிறந்த அறிவாளி திரு. இராமசாமி முதலியார் அவர்களை நியமித்தார்கள். அவர்கள் ஆராய்ச்சி செய்து கொடுத்த அறிக்கையை வைத்துக்கொண்டு அதில் ஏற்படுகின்ற சில்லறைத் தகராறை வைத்துக்கொண்டு, 10 கோடியா, 15 கோடியாஎன்கின்ற புள்ளி விவரங்களால் ஏற்படும் தகராறைவைத்துக்கொண்டு, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியுமோ என்னவோ தெரியவில்லை, அல்லது நேற்று இங்கு குறிப்பிட்டது போன்று, நான்காவது திட்டத்தில்தான் சேர்க்கவேண்டுமோ, அல்லது ஐந்தாவது திட்டத்தில்தான் சேர்க்கவேண்டுமோ என்று கூறக்கூடிய அளவுக்குத்தான் நிலைமை இருக்கிறது. நான் மீண்டும் இந்த அமைச்சரவையைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், இந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றப் போகிறீர்களா அல்லது நாங்கள் இதை விட்டு விலகவா என்று மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் துணிந்து கேட்கவேண்டும். அப்படிக் கேட்பதில் என்ன தவறு இருக்கிறது? நம்முடைய வேண்டுகோளில் நியாயம் இருக்கிறது. வங்காள முதலமைச்சர் தங்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை என்பதற்காகத் தங்கள் இராஜ்யத்தில் சுதந்திர தினத்தையே கொண்டாடவில்லை. வங்காள கவர்னர் சுதந்திர தின விருந்து கொடுக்கவில்லை. அவர்கள் எல்லாம் தேசிய வாதிகள்தான். ஒரு நாள் நீங்களும் அவர்களும் ஒரே ஜெயிலில் இருந்தவர்கள், நான் வேண்டுமென்றால் அன்றைக்கு வேறு இடத்தில் இருந்திருக்கலாம், நான்தான் அன்றைக்கு ஜெயில் வார்டராயிற்றே! நீங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தவர்கள்தான். தங்களுடைய மாநிலமக்களின் உரிமையைக் கேட்கவில்லை என்று தெரிந்த நேரத்தில் அவர்கள் சுதந்திர தினத்தைக்கொண்டாடமாட்டோம், என்று சொல்லக்கூடிய அளவுக்கு அவர்களிடம் உரிமை ஆர்வம் பிறந்திருக்கிறது.

நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்றால், அடிக்கடி போய்க்கேட்கிறீர்கள், அவர்கள் சொல்வதைக் கேட்டு விட்டுத் திருப்பி திருப்பி இங்கு மனம்நொந்து முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு திரும்பி வருகிறீர்கள். தட்டிக்கேட்டால் கண்டிப்பாகக் கிடைக்கும். நமது நிதி அமைச்சர் அவர்கள் ஏசுநாதரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். நானும் ஏசுநாதரைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். "தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்" என்று ஏசுநாதர் சொல்லியிருப்பதை நீங்கள் கடைப்பிடிக்கவேண்டும். ஆனால் நீங்கள் தட்டமறுக்கிறீர்கள், நீங்கள் எப்படியிருக்கிறீர்கள் என்றால், கதவு திறக்குமா, அது திறக்கும்போது பரபரவென்று உள்ளே புகுந்துவிடலாம் என்று பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். நான் கூறுகிறேன், இந்திய சர்க்காரின் கதவு இரும்புக் கதவு, தட்டவேண்டிய உங்கள் கரங்களோ, தேர்தலில் வேலைசெய்து, வேலைசெய்து சக்தி இழந்து போனகரங்கள், திராணி இல்லாத கரங்கள், அதனால் தான் திறக்கப்படுவதில்லை. வடநாட்டில் இவ்விதம் 10-ஆண்டுகள், 15-ஆண்டுகள் என்று திரும்பத் திரும்பக் கேட்கப்படுகிற திட்டங்கள் ஏதாவது இருக்கின்றன என்று கணக்குக்காட்ட முடியுமா? இந்த மாநிலத்தின் கவர்னராக இன்று இருக்கின்ற திரு. விஷ்ணுராம்மேதி அவர்கள் அசாம் மாகாணத்தில் முதல் மந்திரியாக இருந்தபொழுது அந்த நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிலை ஏற்படுத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்தது நமக்குத் தெரியாதா? அவ்விதம் செய்தவர்தான் இன்றைக்கு நம்மிடம் பாரதத்தை ஒன்று என்று எண்ணுங்கள் என்று கூறுகிறார். அன்றைக்கு அவர்கள் அசாம் மாகாணத்தில் முதலமைச்சராக இருந்த காலத்தில், எண்ணெய் சுத்திகரிப்புத்தொழிலை ஏற்படுத்தாவிட்டால், அங்கிருந்த பெரும் பெரும் தலைவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள் தெரியுமா—அதைக்கேட்டால் ஆச்சரியமாக இருக்கும், இதை ஏற்படுத்தாவிட்டால், அசாம் மாகாணம் பிரிந்துபோகும் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட தேசியக் கனல், தேசப்பற்று, அல்ல, நாட்டுப்பற்று ஏன் உங்களிடம் ஏற்படவில்லை? வேறு எதற்கெல்லாமோதான் உங்கள் தேசியப்பற்று உதவுகிறது. அந்த முறையில்தான் உங்கள் தேசப்பற்றைக் கட்டுப்படுத்தியிருக்கிறீர்கள். அந்த முறையில்தான் மத்திய சர்க்காரும் நம்மைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கிற இந்த நேரத்தில், ரீஜனல் டிஸ்பாரிட்டி என்பதைப்பற்றிக் குறிப்பிட்டதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தப் பாஷை எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். வடக்கு தெற்கு என்று பேசாமல் "ரீஜினல் டிஸ்பாரிடி" என்று சொல்லட்டும். இன்னும் சூசகமாக வேண்டுமானால் வேறு முறையில் சொல்லிக்கொள்ளட்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட நேரம், இப்போது தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருக்கும் நண்பர் அழகேசன் அவர்கள் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலம் அது. விவாதங்கள் எல்லாம் முடிந்த பிறகு அப்போதிருந்த தலைவர் அவர்கள் எழுந்து, இன்னும் இரண்டு நிமிஷங்கள் இருக்கின்றன என்று கூறி அழகேசன் அவர்களைப் பேசுகின்றீர்களா என்று கேட்டார். அதற்குள்ளே பேசிவிடுகிறேன் என்று கூறி ஒன்றே ஒன்றைத்தான் அவர் அன்று குறிப்பிட்டார். கிருஷ்ணா பெண்ணாறு திட்டத்தை நிறைவேற்றிக்கொடுங்கள் என்று கேட்டார். இதுவரை ஏன் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று கேட்க அல்ல நான் இப்போது அதை இங்கு குறிப்பிடுவது. ஒரு பாராளுமன்ற—

# 1500 ரூபாயால் அடக்கமுடியாதது உள் உணர்ச்சி

உறுப்பினருக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி விவாதிக்கும்போது இரண்டு நிமிஷங்கள்தாஞ கொடுப்பது என்றும் நான் கேட்கவில்லை. அப்படிக் கேட்டால் நேற்றையதினம் ஒரு அங்கத்தினர் கூறியது போல் "கிடைத்த சான்ஸ் அவ்வளவுதான்'' என்று பேசுவார்கள். நான் அந்தக் குறைபாட்டைப் பற்றிக் குறிப்பிட வரவில்லை. நான் அதைக்கூறி அவரைக் குறைவுபடுத்தவும் விரும்பவில்லை. எனது மாவட்டத்தைச் சேர்ந்தவர் அவர். அவர் அந்த இடத்தில் வேறு ஒரு பதத்தை உபயோகப்படுத்தினார். நம்முடைய அமைச்சர் அவர்கள் 'ரீஜினல் டிஸ்பாரிடி' என்று நாசுக்காகக் கூறியிருக்கிறார்கள்.

இதுவரை வடநாட்டாரால் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும் பல்வேறு திட்டங்கள் 'வீட் ஸோன்'' கோதுமைப் பகுதியிலேயே இருக்கின்றன, அரிசிப் பகுதியிலே இல்லை; அதற்குக் கிருஷ்ணு—பெண்ணாறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கூறியிருக்கிறார்: திராவிட நாடு என்று நாங்கள் சொன்னால், நீங்கள் உங்களுக்கு இருக்கிற கூச்சம் காரணமாக, அச்சம் காரணமாக "ரீஜினல் டிஸ்பாரிடி, பிரதேச வாரி, கோதுமைப் பகுதி'' என்று கூறிக்கொண்டு வருகிறீர்கள். இப்படி, படிப்படியாக நிச்சயம் ஒரு நாள் எங்கள் பக்கத்திலே வருவீர்கள் என்பதிலே எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை. வருவது மட்டுமல்ல; எங்களுடைய திட்டங்கள், யோசனைகள் எல்லாவற்றையும் இன்னும் 10 வருஷத்தில் அல்லது 15 வருஷத்தில் வாங்கிக்கொள்ளப் போகிறீர்கள்.

அதுவும் எங்களுக்குத்தெரியும். அத்தகைய கருத்துக்கு நாட்டு மக்களைத் தயாரிப்பதுதான் எங்களுடைய நோக்கம். அதுவரையில்தான் எங்களுக்கு வேலை. அப்படித் தயார்ப் படுத்தியவுடன் அந்த இடத்தில் நீங்கள் வந்து உட்கார்ந்துகொள்ளுவதில் மிகச் சமர்த்தர்கள் என்பதை உங்களைப்பற்றி அனுபவத்தில் மிக நன்றாகத் தெரிந்துள்ள நான் அறிவேன். நீங்கள் "ரீஜினல் டிஸ்பாரிடி, கோதுமைப் பகுதி, அரிசிப் பகுதி'' என்று பேசி வருவதைத்தான் நாங்கள் வடக்கு, தெற்கு என்று பேசி வருகிறோம். எங்களைப் பார்த்து நீங்கள் கேட்கின்றீர்கள்— ஏன் வடக்கு தெற்கு என்று பிரிக்கிறீர்கள் என்று. கோதுமை ஆகாதா? நீங்கள் கோதுமை — அரிசி என்று பிரிப்பானேன்? கோதுமை வேகாதா? தின்றால் சுவை இருக்காதா? ஜீரணம் ஆகாதா? வலிவு தராதா? கோதுமைப் பகுதியிலேயே எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுகிறார்கள் என்று ஏன் சொல்லவேண்டும். அரிசியைப் பயிரிடாமல் கோதுமையைத் தின்றால் என்ன? ஏன் அழகேசன் அவர்களுக்கு "அரிசிப் பிராந்தியத்தைக் கவனியுங்கள்'' என்று பேசத் தோன்றியது? **அதுதான் அடக்கப்பட முடியாத உள் உணர்ச்சி.** அதை 1500 ரூபாய் கொடுத்து அடக்கினாலும், 5,000 ரூபாய் கொடுத்து அடக்கினாலும், பெரிய சலுகைகளைக் கொடுத்து அடக்கினாலும் உங்கள் உள்ளத்தில் இருந்து அந்த உணர்ச்சி எப்படியும்பீறிட்டுக்கொண்டு வெளியே வந்துவிடுகிறது.

நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் "நியூசன்ஸ்'' என்று கருதினாலும், திரும்பத் திரும்பக் கேட்டேன் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்கு அந்த அளவுக்குத் திருப்தி. அந்த அளவுக்கு என் பக்கத்தில் வந்தார் என்பதைப் பார்த்துப் பூரிப்படைகிறேன். அவர் அங்கே பேசியிருப்பது "தென்னாட்டுக்கு இவ்வளவு என்று ஒதுக்கி விடுங்கள், அதிலே ஆந்திராவுக்கு எவ்வளவு, தமிழகத்திற்கு எவ்வளவு, மைசூருக்கு எவ்வளவு, கேரளத்திற்கு எவ்வளவு என்பதை எங்களுக்குள்ளே நாங்களே முடிவுசெய்து கொள்ளுகிறோம்'' என்பதேயாகும். பிறகு உங்களிடத்தில் வராமல் இருக்கிறோம் என்று கூறியிருக்கிறார். நான் நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்குச் சொல்வேன் "இதுதான் திராவிட நாடு''. (சிரிப்பு)

"சி. சுப்பிரமணியம்:- அந்த அளவுக்கு இருந்தால் சரி.''

ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், திராவிட நாட்டை ஆந்திராக்காரன் ஒப்புக்கொண்டானா, மலபார்க்காரன் ஒப்புக்கொண்டானா என்று பேசுகின்ற பேச்சைப்போல், நம்முடைய நிதியமைச்சர் சொன்னதை மலபார்காரன் ஏற்றுக்கொண்டானா? கன்னடக்காரன் ஏற்றுக்கொண்டானா? ஆந்திராக்காரன் ஏற்றுக் கொண்டானா? என்று நான் கேட்கலாம்.

"சி. சுப்பிரமணியம்:- அங்கேயே, அந்த இடத்திலேயே ஏற்றுக்கொண்டார்கள்.''

அந்த இடத்திலேயே ஏற்றுக்கொண்டதாகச் சொன்னார்கள். நான் அந்த ஆதாரத்தைப் பார்த்துப் பிறகு என் கருத்தைச் சொல்லுவேன். அந்த இடத்தில் ஏற்றுக்கொண்டார்கள் என்பது உண்மையாக இருக்குமானால்—அமைச்சர் சொல்வது உண்மையாகத்தான் இருக்கும்—அதேமாதிரி, அவர்கள் எப்படி அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளோடு சம எடையோடு உட்கார்ந்து பேசியபோது ஏற்றுக்கொண்டார்களோ, அதைப்போல்தான் திராவிட நாட்டுப் பிரிவினைபற்றி சம எடையோடு உட்கார்ந்து பேசினால் நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். ஆகவே, ஆந்திரம் ஏற்றுக் கொண்டுவிட்டதா, மலையாளம் ஏற்றுக்கொண்டுவிட்டதா, கன்னடம் ஏற்றுக்கொண்டுவிட்டதா என்று கேட்பது எங்களை உற்சாகப்படுத்தவேண்டுமானால் பயன்படுத்திக் கொள்ளுவோமே தவிர, மனதைத் தளரவிட அல்ல. நான் கேட்கிறேன்—இந்த மூன்றைப்பற்றி மட்டும் நிதியமைச்சருக்கு அக்கறை வருவானேன்? ஒரிசா இருக்கிறது. பிற்போக்கான பகுதிதான், ஒரிசாவுக்கும் சேர்த்து நியாயம் வழங்குங்கள் என்று ஏன் கேட்கவில்லை? அவர்களுடைய உள் உணர்ச்சி, பந்தம், ஆந்திரம், கேரளம், கர்னடகம் ஆகியவற்றிலே பாய்ந்ததேதவிர, அதைத்தாண்டிப்போகவில்லை. நீங்கள் எவ்வளவுதான் முயற்சி எடுத்துக்கொண்டாலும் அதைத்தாண்டிப் போக முடியாது. நீங்கள் முயற்சித்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். ஆயினும் இந்த மூன்று இடத்திற்குமேல் போகமுடியவில்லை. அதைப்போலவே, இந்த நான்கு பகுதிகளும் ஒரே விதமான எண்ணத்தைக்கொண்டு, ஒரேவிதமான அதிகாரத்தைக் கொண்டு கூட்டு முயற்சியில் வாழ்க்கையை நடத்துவது என்பதே திராவிட நாடு. அதுதான் திராவிட நாடு என்றால், சரி என்றார் அமைச்சர். அமைச்சர் அவர்கள் சாமர்த்தியமாக அப்படியானால் பணத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டால் சுலப

# எதிர்காலத்தைப் பாழாக்குவதா?

மாகப் போகிறது என்றும் கூறுவார். அவர், வக்கீலாக இருந்து இருந்து ஏற்பட்டுப்போன பழக்கம். "அப்படி யானால் நீ பார்த்தாயா? வெளிச்சம் இருந்ததா? வெளிச்சம் இல்லையானால் எப்படிப் பார்த்தாய்?"—இது வக்கீல் வாதம். அப்படிப்பட்ட வாதத்தை இங்கே நிலைநாட்டிக் கொள்ளமுடியாது. உண்மையிலேயே "ரீஜினல் டிஸ்பாரிடி" என்ற அடிப்படைத் தத்துவம் வரவேற்கத் தக்கது. அந்த அளவுக்கு அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதை வலியுறுத்திப் பேசி நம்முடைய மாகாணத்தின் உரிமையையும் பங்கினையும் அதிகப்படுத்தவேண்டும். வயிறார உணவு, மானத்துக்கு ஆடை, அறிவுக்குக் கல்வி, நோய்தீர மருந்து, குடியிருக்க இடம், செய்வதற்குத் தொழில், போதுமான அளவு கூலி, கூலியை வைத்து வாழ்க்கை நடத்த ஆரம்பித்தால் விலைவாசி ஏறுமல் இருக்கக்கூடிய அளவுக்கு உணவு விலைக் கட்டுப்பாடு, ஆகியவற்றைச் செய்துதரவேண்டும். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உபயோகப்படுத்தக்கூடிய பணம் போக மிச்சத்தை முதலீட்டுக்குப் பயன்படுத்துவது என்ற அளவுக்குத் திட்டமிடப்படவேண்டும். ஆகவே, நாம் நம் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமானல் "ரீஜினல் டிஸ்பாரிடி" என்று சொல்வதற்குப் பதிலாக வடக்கு—தெற்கு என்று சொன்னல், பேசினல் வாய் வெந்துவிடாது; குற்றம் வந்துவிடாது.

இந்த மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வேத் துறையில் நியாயம் கிடைக்கவேண்டும்; துறைமுகத் துறையில் நியாயம் கிடைக்கவேண்டும்; திரு. ஸ்ரீநிவாச அய்யர் அவர்கள் சொல்வதுபோல் அதிராம்பட்டிணத்தை ஏன் மறந்துவிட்டீர்கள்? நம்முடைய அமைச்சர் அவர்கள் அங்கே போனது இல்லையென்று நினைக்கிறேன். உண்மையிலேயே வளப்படுத்தவேண்டிய சிறு துறைமுகம் அது. பொறையாறு பகுதி உறுப்பினர் நம்முடைய மாகாணத்திலே பல்வேறு தூர்ந்துபோன துறைமுகங்கள் வளப்படுத்தவேண்டுமென்று சொன்னர். இவற்றையெல்லாம் அபிவிருத்தி செய்யத் தக்க அளவு தொகையைக் கேட்டுப் பெறவேண்டும். பணமா பெரிது என்று நீங்கள் சொல்லலாம். இது, இல்லாதவன் பேசுகிற பேச்சு. இல்லாதவனிடம் ஒரு ஐந்து ரூபாய் கிடைத்துவிட்டால், நல்ல மல் ஜிப்பா தைத்துப் போட்டுக்கொண்டு நோட்டு இருப்பது வெளியே தெரியும்படி காட்டிக்கொண்டு போவான். மிகுந்த பணம் வைத்திருப்பவர்கள் கஜம் எட்டணைத் துணியை வாங்கிச் சட்டை தைத்துப் போட்டுக்கொண்டு நாம் மக்களுக்காகவே இருக்கிறோம் என்று பேசுவார்கள். அவர்களுக்குத் தெரியும்—எங்கெங்கே, எப்படி எப்படித் தங்களுடைய செல்வாக்கை வெளிக்காட்டிக் கொள்வது என்று. ஏழையிடம் பணம் சேர்ந்தால் எப்படி அவன் அதைக் காட்டிக்கொண்டு போகிறதுபோல் நம்முடைய மாகாண அமைச்சர்கள், இதோ பார் நெய்வேலி, அதோ பார் பெரம்பூர் கோச் பாக்டரி, நாட்டில் உள்ளவர்கள், மத்திய சர்க்கார் இவ்வளவு கொடுத்திருக்கிறர்கள் என்று பேசிக்கொண்டிருப்பது நம்முடைய எதிர்காலத்தையே பாழ்படுத்தி விடுகிறது என்பதை அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். ஆகையினல், அந்த வகையிலே இல்லாமல் நம்முடைய மாகாணத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு, ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரக்கூடிய அளவுக்கு, வேண்டிய பணத்தைக் கேட்டுப் பெற்றுத் திட்டங்களைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஆயிரம் கோடி ரூபாய் கேட்டேன் என்பதற்காக, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வெளியிலே பேசும் போது என்னைப் பண்டாரம் என்று சொன்னர். இப்போது என்ன சொல்ல எண்ணியிருக்கிறரோ? கணக்குப் போட்டுப் பார்த்தால் நான் கேட்ட ஆயிரம் கோடி ரூபாய் குறைவு என்பது யாருக்கும் நன்ருகப் புரியும்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி என்ன கருத்து என் போன்றவர்கள் கொள்ள இருக்கிறது என்பதை நான் ஒரு சிறு குறிப்பை உங்கள் முன்னல் எடுத்துச் சொல்லி, அதைப்பற்றி என்னுடைய கருத்து இதுதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

> "I am unable to share the enthusiasim which has been expressed in this House for the pla n."

என்று சொல்லிவிட்டு,

> "The Commission says that any upward movement in wages of the industrial worker at this stage would necessarily result in increasing prices."

என்று சொல்லி, தொழிலாளர்களுக்குக் கூலியை உயர்த்தினல் திட்டம் கெட்டுவிடும் என்று சொல்லப்படுவதற்குத் தரப்படுகிற பதிலாக,

> "I am unable to understand this logic. It is a simple rule of three: If you hold prices and increase wages, profits will go down; if you hold profits and increase wages, prices will go up; if you hold profits and prices, wages will go down.
>
> What the Commission suggests in a disguised manner is that you must hold the profit at its level and you must also hold the price at its level and inevitably lead to lowering of wages.
>
> Sir, I am willing to make this offer. Labour is perfectly willing for a wage freeze provided industrialists will assure us that they will charge to the

# பதவிமோகம் பொல்லாதது

people only cost plus ten percent and nothing more."

தேசியத்தை வளர்ப்பதற்காகவும், தொழில் துறையை அதிகப்படுத்துவதற்காகவும், திட்டங்கள் வெற்றி பெறுவதற்காகவும் நாம் தியாகம் செய்யவேண்டும், உழைப்பை நல்கவேண்டும், எல்லாக் கட்சிகளும் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுவதை மனதிலே வைத்துக்கொண்டுதான், இது சொல்லப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் அப்படிப்பட்ட ஒரு தியாக உணர்ச்சியோடு தங்களுடைய கூலியைக்கூட உயர்த்திக்கொள்ளாமல் இருக்கச் சம்மதிக்கிறார்கள். ஆனால், எப்பொழுது? பொருளை உற்பத்தி செய்யும் முதலாளிகள், தாங்கள் போடுகின்ற முதலுக்கு உற்பத்திச்செலவோடுகூடப்பத்துச் சதவிகிதம் மட்டும் இலாபம் வைத்துக்கொள்ளலாம். அதற்குமேலே கேட்பதில்லை என்று தொழிலதிபர்கள் சொல்லிவிடுவார்களானால், நாங்கள்கூடத் தொழிலாளர்களை அணுகி ஊதிய உயர்வு வேண்டாமென்று சொல்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"Why should not the Planning Commission tell the industrialists that they must charge only cost plus ten percent and nothing more and that sacrifice is called for from the industrialists."

இந்த வாதத்தைச் சொன்னவர் இப்பொழுது நம்முடைய சபையில் இல்லை. இப்பொழுது நம் தொழிலமைச்சராக இருக்கும் கனம் திரு. வெங்கட்டராமன் அவர்கள்தான் பாராளுமன்றத்தில் இருந்தபோது இப்படிப்பட்ட அருமையான கருத்தைச் சொன்னார்கள். 'தொழிலாளர்களுக்குக் கூலியைக்குறைக்காதீர்கள்' என்று பேசினார்கள். உடனே அந்த இடத்திலேயே இதே பக்கத்திலிருந்து போயிருந்த தொழில்துறை அதிபர் திரு. கோயங்கா அவர்கள் 'ஏன்?' என்று கேட்டு, இவருக்கும் அவருக்கும் வாதங்கள் ஏற்பட்டன.

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், பதவி நல்லவர்களை எப்படி எப்படிக் கெடுத்துவிடுகிறது என்பதை எண்ணிப்பார்த்து, அந்த வாய்ப்பு என்போன்றவர்களுக்கு என்றென்றும் ஏற்படாமல் இருக்கவேண்டும் என்று என்னை நானே எச்சரித்துக்கொள்வதற்கே தவிர, யாரையும் குறைசொல்வதற்காக அல்ல.

அப்படிப்பட்ட வகையில், தொழிலாளர்களுக்குக் கூலியைக்கொடுத்து, அந்தக்கூலியிலிருந்து அவர்களுக்கு ஏற்படும் மிச்சத்தைத் திருப்பிப்பெறும் ஒரு நல்ல முறையை வகுத்தால், இங்கு தொழில் அபிவிருத்தி ஏற்படும். அதற்கு நம்முடைய தொழிலமைச்சர் அவர்கள் தனியாகப் புத்தகத்தைத் தயாரித்து, இவைகளையெல்லாம் செய்யப்போகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது அத்தனையும் பொதுத்துறையில் செய்ய இருக்கும் காரியங்களுக்காக ஏறக்குறைய இரண்டாயிரம் இலட்ச ரூபாய் வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. இதைப் பெறுவதற்கு அவர்களுக்குத் தைரியம் இருக்கிறதா? மத்திய சர்க்காரிடத்திலே அந்த உத்தரவாதம் பெற்றுவிட்டார்களா? அவர்களைக் கேட்டுக்கொண்டுதான் அத்தனையும் ஏற்பாடு செய்வதாக வகுத்தார்களா? அல்லது இனி எடுத்துக்கொண்டுபோய்க்கேட்கப்போகிறார்களா என்பது விளக்கப்படவேண்டிய விஷயம். அவர்கள் 14 தொழில்களைப் பொதுத்துறையிலும் 34 தொழில்களைத் தனியார் துறையிலும் இங்கே ஏற்படுத்துவதாகக் கொடுத்திருக்கிறார்கள். இதைப்பற்றிய விவாதம் உண்மையிலேயே பொதுப்படையாகப் பேசப்படுவது மட்டும் போதாது என்று கருதுகிறேன். பாரா, துறை, வாரியாக, விவசாயத்துறை, தொழில்துறை, சமுதாய நலத்துறை இவை அத்தனையும் வைத்துக்கொண்டு பார்த்தால்தான் நல்லபடியான விளக்கங்களை எந்தக் கட்சியில் உள்ளவர்களும் பெறமுடியும். பொதுவாகச் செலவழிக்கும் பணம் கம்யூனிடி டெவலப்மெண்ட் மூலமாகச் செலவழிக்கும் பணம், ஏழை மக்களை, கிராம மக்களை முன்னேற்றிவிட்டது என்று நம்முடைய நிதிஅமைச்சர் அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள்கூட மகிழ்ச்சி அடைந்தார். 'இப்பொழுதெல்லாம் கிராமத்திலே போய்ப் பார்த்தால், அங்கே புதிதாக வீடு கட்டுகிறார்கள், புதிய புதிய ஆடை கட்டிக்கொண்டிருக்கிறார்கள், ஏதோ ஒரு வகையிலே முன்னேற்றம் காண்கிறேன்' என்று அவர் கூடச் சொல்லியிருக்கிறார். 'இது அத்தனைக்கும் காரணம், சமுதாய நலத் திட்டம் (கம்யூனிடி டெவலப்மெண்ட்) என்று எடுத்துப்பேசியிருக்கிறார்.

சமுதாயநலத்திட்டத்தைப்பற்றிப் பண்டிதநேரு அவர்கள் சொன்னதைவிட, ஆர்வத்தோடு வேறு யாரும் சொல்லமுடியாது. யாராவது சொன்னால், அவர் சொன்னதிலே ஏதேனும் ஒரு பகுதியைத்தான் கவனம் வைத்துக்கொண்டு சொல்லவேண்டும். அப்படி ஆர்வத்தோடு சொல்கிறார்கள். "It has revolutionalised the village life' என்று சொல்லியிருக்கிறார். கிராமப்புற மக்களுடைய வாழ்க்கையை அது புரட்சிகரமாக மாற்றியிருக்கிறது என்று சொன்ன அதே பண்டித நேரு அவர்கள், இரண்டு நாட்களுக்கு முன்னால் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை நிதி அமைச்சர் அவர்கள் கூர்ந்து பார்க்கவேண்டும். பண்டித நேரு அவர்கள் இராஜ்ய சபையில் பேசியபோது சொன்னார்;

"Community Development was brilliant for some time, but the shine has been lost and it has become officialised and the process has been slowed down".

என்று எடுத்துச்சொல்லி, அந்தச் சமுதாய நலத் திட்டமே இன்றையதினம் அதிகாரமயமாகிவிட்டது, பலன் குறைந்துவிட்டது, பளபளப்புப் போய்விட்டது, சுவைகூட இல்லை என்று பண்டிதநேரு அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆகையால் எல்லாப் பக்கத்

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

# விடுதலை வீரராகுங்கள்

திலும் எதிர்பார்த்த அளவுக்குப் பலன்கிடைக்காத இந்தக் கசப்பை நாம் உட்கொண்டபோதிலும், இதை முன்னுக்கு வைத்துக்கொண்டு 'ஆகையால் திட்டம்வேண்டாம், முன்னேற்றம் வேண்டாம்' என்று சொல்லாமல், நாம் இதுவரை கையாண்ட பொருளாதாரத் தத்துவமுறை கேடு பயப்பது என்று உணர்ந்து,தெளிவாகத், திட்டமாக எங்களுடைய திட்டம் சமதர்மம்தான், அதிலே தனியார் துறைக்கு இந்த அளவுக்குமேல் இடம் தரமாட்டோம் என்று அறிவித்துவிட்டுந், தனியார் துறையிலே இதுவரை தேங்கியிருக்கும் முதலையும் இலாபத்தையும் பெறுவதற்கு வழிவகை கண்டுபிடித்து, நம்முடைய மாநிலஉரிமையைப் பாதுகாக்க வழிவகை செய்து, இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நாங்கள் இந்தத்திட்டத்திற்குத்தோள்கொடுத்துக் காப்பாற்றுவோம் என்று சொல்வதற்கில்லை. நாங்கள் உங்களோடு உடன் இருக்கிறோம். திட்டங்களை நீங்கள் வெற்றிகரமாக நடத்தும் நேரத்தில் உண்மையிலேயே நீங்கள் எங்களிடத்தில் எந்த அளவுக்கு ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறீர்களோ, அந்த அளவுக்கு ஒத்துழைப்பை நாங்கள் நிச்சயமாகத் தருவோம். ஆனால், அந்த ஒத்துழைப்பைப் பெறவேண்டுமானால், முன்னாலே நீங்கள் உடனடியாகத் தெரிவிக்கவேண்டியது—மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நெய்வேலியும், சேலத்து இரும்பும் நமக்குப் மயன்படத்தக்க அளவு முடிவு பெறுமா, அணு உலைக்கூடம் இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இங்கே நிறைவேற்றப்படுமா, சேதுசமுத்திரத் திட்டமும் தூத்துக்குடித் திட்டமும் இதிலே நிறைவேற்றப்படுமா, புதியஇரயில் பாதைகள் இங்கே அமைக்கப்படுவதற்கு வழிவகை இருக்குமா என்பதில் நீங்கள் உடனடியாக உத்தரவாதம் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இந்த அமைச்சரவையின் பேரில் மக்களுக்கு இருக்கும் நம்பிக்கைப் பிரச்சினையாகவே இதைக் கருதலாம். இதை அவர்கள் தீர்த்து வைப்பதற்கு உண்மையிலேயே வழிவகை இல்லையென்றால், மரியாதையாக,அரசியல் நாகரிகத்தோடு அவர்கள் பதவியிலிருந்து விலகி, மத்திய சர்க்காரிடத்திலே 'நீங்கள் எப்படியோ பார்த்துக்கொள்ளுங்கள்' என்று ஆட்சியை ஒப்படைத்துவிடுவீர்களானால், பிறகு அவர்கள் இருக்கிறார்கள், மக்கள் இருக்கிறார்கள், குறுக்கே நீங்கள் இருந்து மோதிக்கொள்ளத் தேவையில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். வழி மறித்திருக்கும் நந்திபோல், மத்திய சர்க்காருக்கும் மக்களுக்கும் நடுவே நீங்கள் இருந்து கொண்டு, வரும் அதிர்ச்சியையெல்லாம் நீங்கள் தாங்கிக்கொள்கிறீர்கள், வரும் எதிர்ப்புகளை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்கள், அதற்குத்தான் அவர்கள் உங்களைக் கட்டணம் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்று எண்ணும் நேரத்தில் உங்கள் நிலைமையைப் பார்த்து மிக்க பரிதாபப்படுகிறேன். அப்படிப்பட்ட பரிதாபமான நிலையிலேயிருந்து தயவுசெய்து விலகி நாட்டுத் தலைவர் ஆகுங்கள், விடுதலைவீரர் ஆகுங்கள், நாட்டை முன்னேற்றுங்கள், பொருளாதார நிபுணர்களாகுங்கள். அந்த நேரத்திலே பார்த்தால், இப்படி ஒருபக்கம், அப்படி ஒரு பக்கம் இருக்காது, ஒரே பக்கம்தான் இருக்கும் என்பதை நான் எடுத்துச்சொல்லி, அப்படிப்பட்ட துணிவை நீங்கள் பெறுங்கள், பெறுங்கள் என்று சொல்லி, நம்முடைய நிதி அமைச்சர் அந்தத் துணிவைத் தேம்ஸ் நதிக் கரைக்குச் சென்ற பிறகாவது பெற்றுக்கொண்டு, இந்தக் கூவம் நதிக் கரைக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அவருடைய பயணம் வெற்றிகரமாகவும், அவருடைய ஆரோக்கியம் நல்லவிதத்திலும் இருந்து, அவர்களுடைய வாழ்க்கை முறைகள் அந்த இடத்திலே அவருக்கு நல்ல பகுத்தறிவையும், நல்ல அரசியல் சிந்தனை சக்தியைத் தரத்தக்க அளவுக்கு நல்ல சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறேன். அங்கு அவர் தேடிப் பெறும் அறிவுச் செல்வத்தை அவர் கொண்டுவந்து இங்கே தருவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். டில்லியிலிருந்து செல்வத்தைக் கொண்டுவந்து தருவதற்குத்தான் அவர்களால் முடியாமற் போனாலும், அங்கு கிடைக்கும் செல்வத்தை-அறிவுச் செல்வத்தை, 'கோட்டா' இல்லாத செல்வத்தை 'ப்ரையாரிடி' இல்லாத செல்வத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் தாராளமாகக் கொண்டு வந்து, இந்த நாட்டுக்குத் தருவார் என்று எதிர்பார்க்கிறேன். அந்தச் செல்வத்தைத் தரப்போகிற கோவைச் செல்வரை நான் மனதாரப் பாராட்டி வாழ்த்தி வழியனுப்புகிறேன்.

வணக்கம்.

## விற்பனையாளர்கட்கு

"திராவிடநாடு" விற்பனையாளர்களில் பெரும்பாலோர், தங்கள் பட்டியல் பாக்கியை உடனுக்குடன் அனுப்பாது காலதாமதம் செய்வது பெரிதும் வருந்தத்தக்கது.

இனி, ஒவ்வொரு மாதமும் பட்டியல் கிடைத்த ஒரு வாரத்துக்குள் அல்லது 5-ம் தேதிக்குள் பாக்கி அனுப்பாதவர்களுக்குப் பத்திரிகை அனுப்புவது, **கண்டிப்பாக நிறுத்தப்படும்** என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிடநாடு"

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.